ப்லவங்கமா: - வானரர்கள்

ஸர்வே ச - எல்லோருமே
ச - கூட வர
ஏஷாம் - இவர்களின்
மத்யே - இடையில்
ததிமுக: - ததிமுகன்
தரும் - ஒரு மரத்தை
தரஸா - பலத்தாலே
ப்ரக்ருஹ்ய - பிடுங்கிக் கொண்டு
வேகேந - வேகமாய்
ஸமப்யதாவத் - ஓடினான்.

ते शिलाः पादपांश्चापि पर्वतांश्चापि वानराः ।
गृहीत्वाभ्यगमन् क्रुद्धा यत्र ते कपिकुञ्जराः ॥

தே ஶிலா: பாதபாம்ஶ்சாபி பர்வதாம் ஶ்சாபி வாநரா: ।
க்ருஹீத்வாப்யகமந் க்ருத்தா யத்ர தே கபி குஞ்ஜரா: ॥ 22

க்ருத்தா: - சினங்கொண்ட
தே - அந்த
வாநரா: - வானரர்கள்
ஶிலா: ச - கற்களையும்
பாதபாந் அபி - மரங்களையும்
பர்வதாந் அபி - மலைகளையும்
க்ருஹீத்வா - கையிலெடுத்துக் கொண்டு
தே - அந்த
கபிகுஞ்ஜரா: - வானரோத்தமர்கள்
யத்ர ச - எங்கு இருந்தார்களோ அவ்விடத்திற்கு
அப்யகமந் - வந்து சேர்ந்தார்கள்.

ते स्वामिवचनं वीरा हृदयेष्ववसज्य तत् ।
त्वरया ह्यभ्यधावन्त सालतालशिलायुधाः ॥

தே ஸ்வாமி வசனம் வீரா ஹ்ருதயேஷ்வ வஸஜ்ய தத் ।
த்வரயா ஹ்யப்ய தாவந்த ஸாலதால ஶிலா யுதா: ॥ 23

ஸாலதாலஶிலாயுதா: -ஆச்சா, பனைகள்முதலியவைகளை
கதைகளாகக் கொண்ட
வீரா: - தைரியசாலிகளான
தே - அவர்கள்
தத் - அந்த
ஸ்வாமிவசநம் - தலைவன் கட்டளையை
ஹ்ருதயேஷு - உள்ளங்களில்
அவஸஜ்ய - தரித்து

த்வரயா ஹி - பரப்புடனே
அப்யதாவந்த - மேல் விழுந்து தாக்கினார்கள்.

वृक्षस्थांश्च तलस्थांश्च वानरान् बलदर्पितान् ।
अभ्यक्रामंस्ततो वीराः पालास्तत्र सहस्रशः ॥

வ்ருக்ஷ ஸ்தாம்ஶ்ச தலஸ்தாம்ஶ்ச வாநராந் பலதர்பிதாந் ।
அப்யக்ராமம்ஸ் ததோ வீரா: பாலாஸ் தத்ர ஸஹஸ்ரஶ: ॥ 24

தத: - பிறகு
வீரா: - தைரியசாலிகளான
பாலா: - காவல்காரர்கள்
ஸஹஸ்ரஶ: - பலருமாய்
பலதர்பிதாந் - பலத்தால் கொழுத்தவர்களாய்
வ்ருக்ஷஸ்தாந் ச - மரத்தில் இருப்பவர்களும்
தலஸ்தாந் ச - தரையில் இருப்பவர்களுமான
வாநராந் - வானரர்களை
தத்ர - அதே இடத்தில்
அப்யக்ராமந் - சூழ்ந்து மடக்கிக் கொண்டார்கள்.

अथ दृष्ट्वा दधिमुखं क्रुद्धं वानरपुंगवाः ।
अभ्यधावन्त वेगेन हनुमत्प्रमुखास्तदा ॥

அத த்ருஷ்ட்வா ததிமுகம் க்ருத்தம் வாநர புங்கவா: ।
அப்யதாவந்த வேகேந ஹநுமத் ப்ரமுகாஸ்ததா ॥ 25

ததா - அப்பொழுது
அத - அப்படியிருக்கையில்
ஹநுமத்ப்ரமுகா: - ஹனுமார் முதலிய
வாநரபுங்கவா: - வானரத் தலைவர்கள்
ததிமுகம் - ததிமுகனை
க்ருத்தம் - கோபித்திருப்பவனாக
த்ருஷ்ட்வா - கண்டு கொண்டு
வேகேந - வேகமாய்
அப்யதாவந்த - அங்கு ஓடி வந்தார்கள்.

तं सवृक्षं महाबाहुमापतन्तं महाबलम् ।
आर्यकं प्राहरत् तत्र बाहुभ्यां कुपितोऽङ्गदः ॥

தம் ஸவ்ருக்ஷம் மஹாபாஹுமாபதந்தம் மஹாபலம் ।
ஆர்யகம் ப்ராஹரத்தத்ர பாஹுப்யாம் குபிதோऽங்கத: ॥ 26

மஹாபாஹும் - மஹா சாமர்த்தியசாலியும்
மஹாபலம் - மஹா பலிஷ்டனும்
ஆர்யகம் - பூஜ்யனும்

ஸவ்ருக்ஷம்	- மரமும் கையுமாய்
ஆபதந்தம்	- எதிர்த்தோடி வருகிறவனுமான
தம்	- அவனை
அங்கத:	- அங்கதன்
தத்ர	- அந்த ஸமயத்தில்
குபித:	- கோபம் கொண்டனாய்
பாஹுப்யாம்	- இரு கைகளால்
ப்ராஹரத்	- ஓங்கி அறைந்தான்.

मदान्धश्च न वेदैनमार्यकोऽयं ममेति सः ।
अथैनं निष्पिपेषाशु वेगवद्वसुधातले ॥

மதாந்தஶ்ச ந வேதைநமார் யகோऽயம் மமேதி ஸ: ।
அதைநம் நிஷ்பிபேஷாஶு வேகவத்வஸுதாதலே ॥ 27

மதாந்த:	- பரமானந்தத்தால் தலை, கால் புரியாதபடிச் செருக்குற்றிருந்த
ஸ:	- அவன்
ஏநம்	- இவனை
அயம்	- 'இவன்
மம ஆர்யக:	- எனக்குப் பூஜ்யன்'
இதி ச	- என்பதையும்
ந வேத	- மதிக்கவில்லை.
அத	- அப்படியிருக்கையில்
ஏநம்	- இவனை
வஸுதாதலே ஆஶு	- தரையில் சடக்கென
வேகவத்	- பலமாய்
நிஷ்பிபேஷ	- குமுக்கி விட்டான்.

स भग्नबाहूरुभुजो विह्वलः शोणितोक्षितः ।
मुमोह सहसा वीरो मुहूर्तं कपिकुञ्जरः ॥

ஸ பக்நபாஹூருபுஜோ விஹ்வல: ஶோணிதோக்ஷித: ।
முமோஹ ஸஹஸா வீரோ முஹூர்தம் கபிகுஞ்ஜர: ॥ 28

ஸ	- அந்த
வீர:	- தைரியசாலியான
கபிகுஞ்ஜர:	- வானரத் தலைவன்
பக்நபாஹூருபுஜ:	- காயம்பட்ட தோள்களையும், தொடைகளையும், புஜங்களையும் உடையவனாய்
ஶோணிதோக்ஷித:	- ரத்தக் கரைகளையும் உடையவனாய்
ஸஹஸா	- திடீரென்று
முஹூர்தம்	- ஒரு முகூர்த்தம்

விஹ்வலஃ	தன் அறிவு தப்பியவனாய்
முமோஹ	மூர்ச்சையடைந்தான்.

स समाश्वस्य सहसा संक्रुद्धो राजमातुलः ।
वानरान् वारयामास दण्डेन मधुमोहितान् ॥

ஸ ஸமாஶ் வஸ்ய ஸஹஸா ஸங்க்ருத்தோ ராஜமாதுல: ।
வாநராந் வாரயமாஸ தண்டேந மது மோஹிதாந் ॥ 29

ராஜமாதுலஃ	ராஷாவுக்கு மாமனான
ஸஃ	அவன்
ஸஹஸா	உடனே
ஸமாஶ்வஸ்ய	தெளிந்தெழுந்து
ஸங்க்ருத்தஃ	இன்னும் அதிக கோபம் கொண்டவனாய்
மதுமோஹிதாந்	மதுவால் மதிகெட்ட
வாநராந்	வானரர்களை
தண்டேந	தடி கொண்டு
வாரயாமாஸ	தடுத்தான்.

स कथञ्चिद्विमुक्तस्तैर्वानरैर्वानरर्षभः ।
उवाचैकान्तमाश्रित्य भृत्यान् स्वान् समुपागतान् ॥

ஸ கதஞ்சித் விமுக்தஸ்தைர் வாநரைர் வானரர்ஷப: ।
உவாசை காந்த மாஶ்ரித்ய ப்ருத்யாந் ஸ்வாந் ஸமுபாகதான் ॥ 30

வாநரர்ஷபஃ	வானரத் தலைவனான
ஸஃ	அவன்
தைஃ வாநரைஃ	அந்த வானரர்களால்
விமுக்தஃ	விடுபட்டவனாய்
கதஞ்சித்	உடனே
ஏகாந்தம்	தனியான இடத்தை
ஆஶ்ரித்ய	அடைந்து
ஸமுபாகதாந்	கூட வந்த
ஸ்வாந் ப்ருத்யாந்	தனது வேலைக்காரர்களைப் பார்த்து
உவாச	(பின்வருமாறு) சொன்னான்.

एते तिष्ठन्तु गच्छामो भर्ता नो यंत्र वानरः ।
सुग्रीवो विपुलग्रीवः सह रामेण तिष्ठति ॥

ஏதே திஷ்டந்து கச்சாமோ பர்தா நோ யத்ர வாநர: ।
ஸுக்ரீவோ விபுலக்ரீவ: ஸஹ ராமேண திஷ்டதி ॥ 32

ஏதே	‘‘இவர்கள்
திஷ்டந்து	கிடக்கட்டும்;
நஃ பர்தா	நமது நாதனும்

விபுலக்ரீவः - பெருங்கழுத்துடையவரும்,
ஸுக்ரீவः - ஸுக்ரீவர் என்பவருமான
வாநரाः - வானரர்
ராமேண ஸஹ - ஸ்ரீராமரோடு கூட
யத்ர திஷ்டதி - எங்கிருக்கின்றாரோ அங்கு
கச்சாமः - நாம் போவோம்.

सर्वं चैवाङ्गदे दोषं श्रावयिष्यामि पार्थिवे ।
अमर्षी वचनं श्रुत्वा घातयिष्यति वानरान् ॥

ஸர்வம் சைவாங்கதே தோஷம் ஶ்ராவயிஷ்யாமி பார்திவே ।
அமர்ஷீ வசனம் ஶ்ருத்வா காதயிஷ்யதி வாநராந் ॥ 33

பார்திவே - "அரசரிடத்தில்
தோஷம் - குற்றம்
ஸர்வம் - எல்லாவற்றையும்
அங்கதே ஏவ - அங்கதனிடத்திலேயே
ஶ்ராவயிஷ்யாமி - சொல்லுவிக்கிறேன்.
வசநம் ஶ்ருத்வா - விஷயத்தைக் கேட்டு
ச - உடனே
அமர்ஷீ - கோபமடைந்தவராய்
வாநராந் - வானரர்களை
காதயிஷ்யதி - வதை செய்து விடுவார்.

इष्टं मधुवनं ह्येतत् सुग्रीवस्य महात्मनः ।
पितृपैतामहं दिव्यं देवैरपि दुरासदम् ॥

இஷ்டம் மதுவனம் ஹ்யேதத் ஸுக்ரீவஸ்ய மஹாத்மன: ।
பித்ருபைதாமஹம் திவ்யம் தேவைரபி துராஸதம் ॥ 34

ஹி - "ஏனெனில்
தேவைः அபி - தேவர்களாலும்
துராஸதம் - அணுகவொண்ணாததாய்
பித்ருபைதாமஹம் - தலைமுறை தலைமுறையாய் வந்ததும்,
திவ்யம் - ரமணீயமானதுமான
ஏதத் மதுவநம் - இந்த மதுவனம்
மஹாத்மநः - மஹாத்மாவான
ஸுக்ரீவஸ்ய - சுக்ரீவருக்கு
இஷ்டம் - இஷ்டமானது.

स वानरानिमान् सर्वान् मधुलुब्धान् गतायुषः ।
घातयिष्यति दण्डेन सुग्रीवः ससुहृज्जनान् ॥

ஸ வாநராநிமாந் ஸர்வாந் மதுலுப்தாந் கதாயுஷ: ।
காதயிஷ்யதி தண்டேந ஸுக்ரீவ: ஸஸுஹ்ருஜ்ஜநாந் ॥ 35

ஸ:	-	அந்த
ஸுக்ரீவ:	-	சுக்ரீவர்
மதுலுப்தாந்	-	தேனுக்காசைப்பட்ட
கதாயுஷ:	-	அல்பாயுஸ்ஸுகளான
இமாந்	-	இந்த
வாநராந்	-	வானரர்கள்
ஸர்வாந்	-	எல்லோரையும்
ஸஸுஹ்ருஜ்ஜநாந்	-	இஷ்ட மித்திரர்களுட்பட
தண்டேந	-	ஒரு தடி கொண்டு
காதயிஷ்யதி	-	தொலைத்து விடுவார்.

वध्या ह्येते दुरात्मानो नृपाज्ञापरिभाविनः ।
अमर्षप्रभवो रोषः सफलो नो भविष्यति ॥

வத்யா ஹ்யேதே துராத்மாநோ ந்ருபாஞாபரிபாவின: ।
அமர்ஷ ப்ரபவோ ரோஷ: ஸபலோ நோ பவிஷ்யதி ॥ 36

ந்ருபாக்ஞா பரிபாவிந: -"அரசன் கட்டளையை மீறிய

ஏதே துராத்மாந:	-	இந்த துராத்மாக்கள்
வத்யா: ஹி	-	கொல்லப்பட வேட்டியவர்கள்தாம்
அமர்ஷப்ரபவ:	-	தாங்க முடியாதபடி மேலெழுந்த
ந: ரோஷ:	-	நமது ரோஷம்
ஸபல:	-	ஸபலமாய்
பவிஷ்யதி	-	முடியப் போகிறது."

एवमुक्त्वा दधिमुखो वनपालान् महाबलः ।
जगाम सहसोत्पत्य वनपालैः समन्वितः ॥

ஏவமுக்த்வா ததிமுகோ வனபாலாந் மஹாபல: ।
ஜகாம ஸ்ஹஸோத்பத்ய வனபாலை: ஸமந்வித: ॥ 37

மஹாபல:	-	மஹாபலவானான
ததிமுக:	-	ததிமுகன்
வநபாலாந்	-	தோட்டக்காரர்களைப் பார்த்து
ஏவம்	-	இப்படி
உக்த்வா	-	சொல்லி
வநபாலை:	-	தோட்டக்காரர்களுடன்
ஸமந்வித:	-	கூடினவனாகவே
ஸஹஸா	-	உடனே
உத்பத்ய	-	கிளம்பி
ஜகாம	-	சென்றான்.

निमेषान्तरमात्रेण स हि प्राप्तो वनालयः ।
सहस्रांशुसुतो धीमान् सुग्रीवो यत्र वानरः ॥

நிமேஷாந்தரமாத்ரேண ஸ ஹி ப்ராப்தோ வநாலய: ।
ஸஹஸ்ராம்ஶுஸுதோ தீமாந் ஸுக்ரீவோ யத்ர வாநர: ॥ 38

ஸ:	- அந்த
வநாலய:	- வானரன்
ஸஹஸ்ராம்ஶுஸுத:	- சூரிய குமாரனும்
தீமாந்	- புத்திமானும்
வாநர:	- வானரனுமான
ஸுக்ரீவ:	- ஸுக்ரீவர்
யத்ர	- எங்கே அங்கு
நிமேஷாந்தரமாத்ரேண ஹி	- ஒரு நிமிஷத்திகுள்ளாகவே
ப்ராப்த:	- வந்து சேர்ந்தான்.

रामं च लक्ष्मणं चैव दृष्ट्वा सुग्रीवमेव च ।
समप्रतिष्ठां जगतीमाकाशान्निपपात ह ॥

ராமம் ச லக்ஷ்மணம் சைவ த்ருஷ்ட்வா ஸுக்ரீவ மேவ ச ।
ஸமப்ரதிஷ்டாம் ஜகதீ மாகாஶாந்நிபபாத ஹ ॥ 39

ராமம் ச	- ஸ்ரீராமரையும்
லக்ஷ்மணம் ச	- லக்ஷ்மணரையும்
ஸுக்ரீவம் ஏவ ச	- ஸுக்ரீவரையும்
த்ருஷ்ட்வா	- கண்டு
ஏவ	- உடனே
ஆகாஶாத்	- ஆகாயத்தில் இருந்து
ஸமப்ரதிஷ்டாம்	- ஸமதலமான
ஜகதீம் ச	- நிலத்திலும்
நிபபாத	- இறங்கினான்
ஹ	- காண்!

संनिपत्य महावीर्यः सर्वैस्तैः परिवारितः ।
हरिर्दधिमुखः पालैः पालानां परमेश्वरः ॥

ஸந்நிபத்ய மஹாவீர்ய: ஸர்வைஸ்தை: பரிவாரித: ।
ஹரிர்ததிமுக: பாலை: பாலாநாம் பரமேஶ்வர: ॥ 40

स दीनवदनो भूत्वा कृत्वा शिरसि चाञ्जलिम् ।
सुग्रीवस्य शुभौ मूर्ध्ना चरणौ प्रत्यपीडयत् ॥

ஸ தீநவதநோ பூத்வா க்ருத்வா ஶிரஸி சாஞ்ஜலிம் । 41
ஸுக்ரீவஸ்ய ஶுபௌ மூர்த்நா சரணௌ ப்ரத்ய பீடயத்॥

பாலாநாம்	-	வனபாலருக்கு
பரமேஶ்வரஃ	-	மேலான அதிகாரியும்
மஹாவீர்யஃ	-	மஹா வீர்யவானுமான
ததிமுகஃ	-	ததிமுகன் என்ற
ஸஃ ஹரிஃ	-	அந்த வானரன்
தைஃ பாலைஃ	-	அந்தக் காவலாளர்கள்
ஸர்வைஃ	-	எல்லோராலும்
பரிவாரிதஃ	-	சூழப்பட்டவனாய்
தீநவதநஃ பூத்வா	-	வாடிய முகத்தினனாகி
ஶிரஸி	-	தலையில்
அஞ்ஜலிம் ச	-	அஞ்சலியையும்
க்ருத்வா	-	செய்து கொண்டு
ஸந்நிபத்ய	-	அருகே சென்று
ஸுக்ரீவஸ்ய	-	ஸுக்ரீவருடைய
ஶுபௌ சரணௌ	-	திருவடித்வயங்களில்
மூர்த்நா ப்ரத்யபீடயத்	-	முடியிட்டு வணங்கினான்.

இத்யார்ஷே ஶ்ரீமத் ராமாயணே வால்மீகீயே ஆதிகாவ்யே
சதுர்விம்ஶதி ஸஹஸ்ரிகாயாம் ஸம்ஹிதாயாம் ஸுந்தர காண்டே
ததிமுககிலிகாரோ நாம த்விஷஷ்டிதம: ஸர்க: ॥

அறுபத்து மூன்றாவது ஸர்க்கம்

ततो मूर्ध्ना निपतितं वानरं वानरर्षभः ।
दृष्ट्वेवोद्विग्नहृदयो वाक्यमेतदुवाच ह ॥

ததோ மூர்த்நா நிபதிதம் வாநரம் வாநரர்ஷப: ।
த்ருஷ்ட்வைவோத் விக்ந ஹ்ருதயோ வாக்யமேதுதுவாச ஹ ॥ 1

தத: - அப்பொழுது
மூர்த்நா - தலையால்
நிபதிதம் - விழுந்து வணங்கிய
வாநரம் - வானரனை
த்ருஷ்ட்வா - கண்டு
ஏவ - உடனே
வாநரர்ஷப: - வானராதிபர்
உத்விக்நஹ்ருதய: - பதைபதைத்த மனத்தினராகி
ஏதத் - பின்வரும்
வாக்யம் - சொல்லை
உவாச ஹ - சொன்னார்.

उत्तिष्ठोत्तिष्ठ कस्मात्त्वं पादयोः पतितो मम ।
अभयं ते भवेद्वीर वीर सर्वमेवाभिधीयताम् ॥

உத்திஷ்டோத்திஷ்ட கஸ்மாத்த்வம் பாதயோ: பதிதோ மம ।
அபயம் தே பவேத் வீர ஸர்வமேவாபிதீயதாம் ॥ 2

உத்திஷ்ட உத்திஷ்ட - "எழுந்திரும், எழுந்திரும்
வீர - வீரரே!
கஸ்மாத் - ஏன்
த்வம் - நீர்
மம பாதயோ: - எனது கால்களில்
பதித: - விழுந்தீர்?
ஸர்வம் ஏவ - எல்லாம்
அபிதீயதாம் - விளங்கக் கூறப்படட்டும்.
தே - உமக்கு
அபயம் பவேத் - அபயம் உண்டாகும்."

स तु विश्वासितस्तेन सुग्रीवेण महात्मना ।
उत्थाय सुमहाप्राज्ञो वाक्यं दधिमुखोऽब्रवीत् ॥

ஸ து விஶ்வாஸி தஸ்தேந ஸுக்ரீவேண மஹாத்மநா ।
உத்தாய ஸுமஹா ப்ராஜ்ஞோ வாக்யம் ததிமுகோSப்ரவீத் ॥ 3

ஸுமஹாப்ராஜ்ஞ:	மிகவும் புத்திசாலியான
ஸ: ததிமுக:	அந்தத் ததிமுகன்
மஹாத்மநா	மஹாத்மாவான
தேந	அந்த
ஸுக்ரீவேண	ஸுக்ரீவரால்
விஶ்வாஸித:	தேற்றப்பட்டவனாகி
து	இப்பொழுது
உத்தாய	எழுந்து
வாக்யம்	பின்வரும் வாக்கியத்தை
அப்ரவீத்	சொன்னான்.

नैवर्क्षरजसा राजन्न त्वया नापि वालिना ।
वनं निसृष्टपूर्वं हि भक्षितं तच्च वानरैः ॥

நைவர் க்ஷ ரஜஸா ராஜந்ந த்வயா நாபி வாலிநா ।
வனம் நிஸ்ருஷ்ட பூர்வம் ஹி பக்ஷிதம் தச்ச வாநரை: ॥ 4

ராஜந்	''அரசே!
வநம்	வனம்
நிஸ்ருஷ்டபூர்வம்	இதற்குமுன், பிறர் உட்புக அனுமதி பெற்ற இடமாக
ரிக்ஷரஜஸா ஹி	ரிக்ஷ ரஜஸ்ஸினாலும்
ந	இல்லை;
வாலிநா ஏவ	வாலியினாலும்
ந	இல்லை;
த்வயா ச	உம்மாலும்
ந	இல்லை;
அபி	அப்படியிருந்தும்
தத்	அது
வாநரை:	வானரர்களால்
பக்ஷிதம்	ஹதமாக்கப்பட்டு விட்டது.

एभिः प्रधर्षिताश्चैव वानरा वनरक्षिभिः ।
मधून्यचिन्तयित्वेमान् भक्षयन्ति पिबन्ति च ॥

ஏபி: ப்ரதர்ஷிதாஶ்சைவ வாநரா வநரக்ஷிபி: ।
மதூந்யசிந்தயித்வேமாந் பக்ஷயந்தி பிபந்தி ச॥ 5

ஏபி: வநரக்ஷிபி:	''இந்த வன பாலர்களால்
ப்ரதர்ஷிதா:	தகையப்பட்ட
வாநரா:	வானரர்கள்
இமாந் ஏவ	இவர்களையே
அசிந்தயித்வா	பொருட்படுத்தாது

மதூநி	- மதுக்களை
பிபந்தி	- பருகிக் கொண்டிருக்கிறார்கள்;
ச	- இன்னும்
பக்ஷயந்தி ச	- அழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

शिष्टमत्रापविध्यन्ति भक्षयन्ति तथापरे ।
निवार्यमाणास्ते सर्वे भ्रुवौ दर्शयन्ति हि ॥

ஶிஷ்ட மத்ராபவித்யந்தி பக்ஷயந்தி ததா பரே ।
நிவார்ய மாணாஸ் தே ஸர்வே ப்ருவௌ தர்ஶயந்தி ஹி ॥ 6

பரே	- ''சிலர்
ஶிஷ்டம்	- மிகுந்ததை
அத்ர	- அங்கேயே
அபவித்யந்தி	- கொட்டுகிறார்கள்;
ஸர்வே	- எல்லோரும்
ததா	- அப்படியே
பக்ஷயந்தி	- அழித்துக் கொண்டிருக்கிறார்கள்;
ஹி	- ஆகையால்
நிவார்யமாணாঃ தே	- விலக்கப்பட்ட அவர்கள்
ப்ருவௌ வை	- புருவங்களை
தர்ஶயந்தி	- சுழித்துக் காட்டுகிறார்கள்.

इमे हि संरब्धतरास्तथा तैः संप्रधर्षिताः ।
वारयन्तो वनात्तस्मात् क्रुद्धैर्वानरपुङ्गवैः ॥

இமே ஹி ஸம்ரப்த தராஸ்ததா தைঃ ஸம்ப்ரதர்ஷிதாঃ ।
வாரயந்தோ வநாத்தஸ்மாத் க்ருத்தைர்வாநர புங்கவைঃ ॥ 7

ததா	- ''அன்றியும்
தஸ்மாத்	- அந்த
வநாத்	- வனத்தில் இருந்து
வாரயந்தঃ	- ஓட்டப்போன
இமே ஹி	- இவர்களும்
தைঃ	- அந்த
க்ருத்தைঃ	- சினம் கொண்ட
வாநரபுங்கவைঃ	- வானரப் பெரியவர்களால்
ஸம்ப்ரதர்ஷிதாঃ	- அடித்துத் துன்புறுத்தப்பட்டவர்களாய்
ஸம்ரப்ததராঃ	- வெருண்டோடி வந்து விட்டார்கள்.

ततस्तैर्बहुभिर्वीरैर्वानरैर्वानरर्षभ ।
संरक्तनयनैः क्रोधाद्धरयः प्रविचालिताः ॥

ததஸ்தைர் பஹுபிர் வீரைர் வாநரைர் வாநரர்ஷப । 8
ஸம்ரக்தநயநைঃ க்ரோதாத்ஹரயঃ ப்ரவிசாலிதাঃ ॥

வாநரர்ஷப	-	''ஹே வானரோத்தமா!
தத:	-	அவ்விடத்தில்
ஹரய:	-	வானரர்கள்
க்ரோதாத்	-	கோபத்தால்
ஸம்ரக்தநயனை:	-	கண்கள் சிவந்த
பஹுபி:	-	அநேகர்களான
தை:	-	அந்த
வாநரை:	-	வானர
வீரை:	-	வீரர்களால்
ப்ரவிசாலிதா:	-	ஒன்றும் தோன்றாதபடி மனக் குழப்பம் அடைவிக்கப்பட்டார்கள்.

पाणिभिर्निहताः केचित् केचिज्जानुभिराहताः ।
प्रकृष्टाश्च यथाकामं देवमार्गं च दर्शिताः ॥

பாணிபிர் நிஹதா: கேசித் கேசிஜ்ஜாநுபிராஹதா: ।
ப்ரக்ருஷ்டாஶ்ச யதா காமம் தேவமார்கம் ச தர்ஶிதா: ॥ 9

கேசித்	-	''சிலர்
பாணிபி:	-	கைகளால்
நிஹதா:	-	அறையப்பட்டார்கள்;
ஜாநுபி:	-	முழங்கால்களால்
ஆஹதா:	-	உதைக்கப்பட்டார்கள்;
ச	-	அதுவுமன்றி
கேசித்	-	சிலர்
ப்ரக்ருஷ்டா:	-	பிடித்திழுக்கப்பட்டவர்களாய்
யதாகாமம்	-	மனம் போனபடி
தேவமார்கம் ச	-	அபானத் துவாரத்தையும்
தர்ஶிதா:	-	காட்டப்பட்டார்கள்.

एवमेते हताः शूरास्त्वयि तिष्ठति भर्तरि ।
कृत्स्नं मधुवनं चैव प्रकामं तैः प्रभक्ष्यते ॥

ஏவமேதே ஹதா: ஶூராஸ்த்வயி திஷ்டதி பர்தரி ।
க்ருத்ஸ்நம் மதுவனம் சைவ ப்ரகாமம் தை: ப்ரபக்ஷ்யதே ॥ 10

த்வயி ஏவ	-	''தாமே
பர்தரி	-	நாதராக
திஷ்டதி ச	-	இருக்கும் பொழுது
ஏதே ஶூரா:	-	இந்த சூரர்கள்
ஏவம்	-	இப்படி
தை:	-	அவர்களால்
ஹதா:	-	படையுண்டார்கள்.

மதுவநம் - மதுவனம்
க்ருத்ஸ்நம் - முழுவதும்
ப்ரகாமம் - மனம் போன வண்ணமாய்
ப்ரபக்ஷ்யதே - ஹதம் செய்யப்படுகின்றது.''

एवं विज्ञाप्यमानं तु सुग्रीवं वानरर्षभम् ।
अपृच्छत् तं महाप्राज्ञो लक्ष्मणः परवीरहा ॥

ஏவம் விஞாப்யமானம் து ஸுக்ரீவம் வாநரார்ஷபம் ।
அப்ருச்சத்தம் மஹாப்ராஞோ லக்ஷ்மண: பரவீரஹா ॥ 11

பரவீரஹா - சத்ருக்களின் வீரர்களை ஸம்ஹரிப்பவரும்
மஹாப்ராஜ்ஞ: - அதிமேதாவியுமான
லக்ஷ்மண: - லக்ஷ்மணர்
ஏவம் - இவ்வாறு
விஜ்ஞாப்யமாநம் - விண்ணப்பம் செய்யப்படுபவரும்
வாநரர்ஷபம் - வானரோத்தமருமான
தம் - அந்த
ஸுக்ரீவம் - ஸுக்ரீவரைப் பார்த்து
தம் - அவனைக் குறித்து
அப்ருச்சத் - இப்படிக் கேட்டார்.

किमयं वानरो राजन् वनपः प्रत्युपस्थितः ।
कं चार्थमभिनिर्दिश्य दुःखितो वाक्यमब्रवीत् ॥

கிமயம் வாநரோ ராஜந் வநப: ப்ரத்யுபஸ் தித: ।
கஞ் சார்தமபி நிர்திஶ்ய துக்கிதோ வாக்யமப்ரவீத் ॥ 12

ராஜந் - ''அரசே
வநப: - வனபாலனான
அயம் வாநர: - இந்த வானரன்
கிம் - ஏன்
ப்ரத்யுபஸ்தித: - இங்கு வந்தான்?
கம் - எந்த
அர்த்தம் அபிநிர்திஶ்ய-விஷயத்தைப் பற்றி
து:கித: ச - விசனப்படுபவனாய்
வாக்யம் - விண்ணப்பம்
அப்ரவீத் - செய்து கொண்டான்?''

एवमुक्तस्तु सुग्रीवो लक्ष्मणेन महात्मना ।
लक्ष्मणं प्रत्युवाचेदं वाक्यं वाक्यविशारदः ॥

ஏவமுக்தஸ்து ஸுக்ரீவோ லக்ஷ்மணேன மஹாத்மநா ।
ல்க்ஷ்மணம் ப்ரத்யுவாசேதம் வாக்யம் வாக்ய விஶாரத: ॥ 13

மஹாத்மநா - மஹாத்மாவான
லக்ஷ்மணேந - லக்ஷ்மணரால்
ஏவம் - இப்படி
உக்த: - வினவப்பட்டவரும்
வாக்யவிஶாரத: - வாக்கில் வல்லவருமான
ஸுக்ரீவ: - ஸுக்ரீவர்,
லக்ஷ்மணம் - லக்ஷ்மணரைப் பார்த்து
து - இது விஷயத்தில்
இதம் வாக்யம் - பின்வரும் மொழியை
ப்ரத்யுவாச - பதிலாகச் சொன்னார்.

आर्य लक्ष्मण सम्प्राह वीरो दधिमुखः कपिः ।
अङ्गदप्रमुखैर्वीरैर्भक्षितं मधु वानरैः ।।

ஆர்ய லக்ஷ்மண ஸம்ப்ராஹ வீரோ ததிமுக: கபி: ।
அங்கத ப்ரமுகைர் வீரைர் பக்ஷிதம் மது வாநரை: ॥ *14*

ஆர்ய - ''ஐயா!
லக்ஷ்மண - லக்ஷ்மணரே!
அங்கதப்ரமுகை: - அங்கதன் முதலான
வாநரை: வீரை: - வானர வீரர்களால்
மது - மதுவனம்
பக்ஷிதம் - ஹ்தம் செய்யப்பட்டதாக
ததிமுக: - ததிமுகன் என்ற
கபி: - வானர
வீர: - வீரர்
ஸம்ப்ராஹ - அறிவித்து விட்டார்.

वारयन्तश्च सहितास्तथा जानुभिराहताः ।।

வனம் யதபி பன்னாஸ்தே: ஸாதிதம் கர்ம வாநரை: ॥ 15

தே - ''அவர்கள்
வநம் - மது வனத்திற்கு
அபிபந்நா: - வந்துவிட்டார்கள்;
யத் - அப்படியிருத்தலால்
வாநரை: - வானரர்களால்
கர்ம - போன காரியம்
ஸாதிதம் - ஸபலமாகி விட்டது.

दृष्टा देवी न सन्देहो न चान्येन हनूमता ।
न ह्यन्यः साधने हेतुः कर्मणोऽस्य हनूमतः ।।

த்ருஷ்டா தேவீ ந ஸந்தேஹோ ந சாந்யேந ஹநூமதா ।
ந ஹ்யன்ய: ஸாதநே ஹேது: கர்மணோऽஸ்ய ஹநூமத: ॥ 16

ஹநூமதா ச	''ஹனுமாராலேயே
தேவீ	தேவி
த்ருஷ்டா	கண்டு பிடிக்கப்பட்டாள்;
ஸந்தேஹ: ச	ஸந்தேஹம் இல்லை;
அந்யேந	வேறொருவராலும்
ந	முடியாது;
அஸ்ய	இந்த
கர்மண:	கார்யத்தின்
ஸாதநே	நிர்வாஹ விஷயத்தில்
அந்ய: ஹி	வேறொருவனும்
ஹேது:	ஹேதுவாக
ந	முடியாது.

कार्यसिद्धिर्मतिश्चैव तस्मिन् वानरपुङ्गवे ।
व्यवसायश्च वीर्यं च श्रुतं चापि प्रतिष्ठितम् ॥

கார்யஸித்திர் மதிஶ்சைவ தஸ்மிந் வாநர புங்கவே ।
வ்யவஸாயஶ் ச வீர்யம் ச ஶ்ருதம் சாபி ப்ரதிஷ்டிதம் ॥ 17

கார்யஸித்தி: அபி	''கார்ய ஸித்தியும்,
மதி: ச	மதியும்,
வ்யவஸாயம் ச	தீர்மானமும்
வீர்யம் ச	பராக்கிரமும்,
ஶ்ருதம் ச	கல்வியும்,
தஸ்மிந்	அந்த
வாநரபுங்கவே	வானரோத்தமரிடத்தில்
ஏவ	மாத்திரம்
ப்ரதிஷ்டிதம்	ஒருங்கே குடிகொண்டிருக்கிறது.

जाम्बवान् यत्र नेता स्यादङ्गदश्च महाबलः ।
हनूमांश्चाप्यधिष्ठाता न यस्य गतिरन्यथा ॥

ஜாம்பவாந் யத்ர நேதா ஸ்யாதங்கதஶ்ச மஹாபல: ।
ஹநுமாம் ஶ்சாப்யதிஷ்டாதா ந தஸ்ய கதிரந்யதா ॥ 18

அபி	''அதுவும் தவிர
யத்ர	எந்தக் காரியமானது
அங்கத:	அங்கதன்
மஹாபல: ச	சேனைத் தலைவனாயும்
ஜாம்பவாந்	ஜாம்பவந்தர்
நேதா ச	விசாரணைத் தலைவனாயும்
ஹநுமான்	ஹனுமார்

அதிஷ்டாதா ஹி	-	எதை எதை, யார் யார், எப்பொழுது செய்ய வேண்டுமென்பதைத் திட்டம் செய்வோனாயும்
ஸ்யாத்	-	விளங்குகிறதோ
அஸ்ய கதி:	-	இதன் பலன்
அந்யதா ந	-	உத்தேசத்திற்கு வேறாய் இராது.

अङ्गदप्रमुखैर्वीरैर्हतं मधुवनं किल ।
विचित्य दक्षिणामाशामागतैर्हरिपुङ्गवैः ॥

அங்கத ப்ரமுகைர் வீரைர் ஹதம் மதுவனம் கில ।
விசித்ய தக்ஷிணாமாஶாமாகதைர் ஹரி புங்கவை: ॥ 19

மதுவநம்	-	‘‘மதுவனமானது
தக்ஷிணாம் ஆஶாம்	-	தெற்குத் திக்கை
விசித்ய	-	தேடி விட்டு
ஆகதை:	-	திரும்பி வந்து சேர்ந்த
அங்கதப்ரமுகை:	-	அங்கதன் முதலிய
வீரை:	-	வீரர்களான
ஹரிபுங்கவை:	-	வானரோத்தமர்களால்
கில	-	இப்பொழுது தோஷமாகாது என்ற தைர்யம் கொண்டே
ஹதம்	-	ஹதம் செய்யப்பட்டிருக்கிறது.

नैषामकृतकृत्यानामीदृशः स्यादुपक्रमः ।
आगतैश्च प्रमथितं यथा मधुवनं हि तैः ॥
धर्षितं च वनं कृत्स्नमुपयुक्तं च वानरैः ॥

நைஷாமக்ருத க்ருத்யாநாமீத்ருஶ: ஸ்யாதுபக்ரம: ।
ஆகதைஶ்ச ப்ரமதிதம் யதா மதுவனம் ஹி தை: ॥
தர்ஷிதம் ச வனம் க்ருத்ஸ்நமுபயுக்தம் ச வாநரை: ॥ 20

ஆகதை:	-	‘‘திரும்பி வந்து சேர்ந்த
தை: ஹி	-	அவர்களாலேயே
மதுவநம்	-	மதுவனம்
ப்ரமதிதம்	-	கண்டபடி அழிக்கப்பட்டதென்பது
யதா ச	-	எதுவோ,
ஈத்ருஶ:	-	இப்படிப்பட்ட
உபக்ரம:	-	மிதமிஞ்சிய கார்யம்
அக்ருதக்ருத்யாநாம்	-	கார்யஸித்தி பெறாத
ஏஷாம்	-	இவர்களுக்கு
ந ஸ்யாத்	-	ஏற்பட மாட்டாது:
ச	-	அதுவுமன்றி

வாநரை:	- வானரர்களால்
உபபுக்தம்	- அருந்தப்பட்டிருக்கிறது;
வநம்	- வனம்
க்ருத்ஸ்நம் ச	- முழுவதுமே
தர்ஷிதம்	- பாழாக்கப்பட்டிருக்கிறது.

वारयन्तश्च सहितास्तथा जानुभिराहताः ।

வாரயந்தஸ்ச்ச ஸஹிதாஸ்ததா ஜானுபிராஹதா: ॥ 21

ததா	- ''மேலும்
ஸஹிதா:	- ஒன்று கூடி
வாரயந்த: ச	- விலக்க வந்தவர்களும்
ஜாநுபி:	- முழங்கால்களால்
ஆஹதா:	- உதைக்கப்பட்டிருக்கிறார்கள்.

एतदर्थमयं प्राप्तो वक्तुं मधुरवागिह ।
नाम्ना दधिमुखो नाम हरिः प्रख्यातविक्रमः ॥

ஏத தர்தமயம் ப்ராப்தோ வக்தும் மதுரவாகிஹ ।
நாம்நா ததி முகோ நாம ஹ்ரி: ப்ரக்யாத விக்ரம: ॥ 22

நாம்நா	- ''பெயரால்
ததிமுக:	- ததிமுகர்
நாம	- என்றவரும்
ப்ரக்யாதவிக்ரம:	- பிரக்யாதி பெற்ற பராக்கிரமமுடைய
அயம்	- இந்த
ஹரி:	- வானரர்
மதுரவாக்	- சுபமான சொல்லைச் சொல்லுகிறவராய்
ஏததர்தம்	- இப்படிப்பட்ட விஷயத்தை
வக்தும்	- சொல்ல
இஹ	- இப்பொழுது
ப்ராப்த:	- வந்திருக்கிறார்.

दृष्टा सीता महाबाहो सौमित्रे पश्य तत्त्वतः ।
अभिगम्य तथा सर्वे पिबन्ति मधु वानराः ॥

த்ருஷ்டா ஸீதா மஹாபாஹோ ஸௌமித்ரே பஶ்ய தத்த்வத: । 23
அபிகம்ய ததா ஸர்வே பிபந்தி மது வாநரா: ॥

மஹாபாஹோ	- ''மஹாபாஹுவே!
ஸௌமித்ரே	- ஸுமித்ரை பெற்ற செல்வமே!
தத்வத:	- உள்ளபடி
பஶ்ய	- நீர் யோசித்துப் பாரும்
வாநரா:	- வானரர்கள்
ஸர்வே	- அனைவரும்

அபிகம்ய	திரும்பி வந்து
மது	மதுவை
பிபந்தி	பருகிக் கொண்டிருக்கிறார்கள்
ததா	என்பதால்
ஸீதா	ஸீதை
த்ருஷ்டா	கண்டுபிடிக்கப்பட்டாள்.

न चाप्यदृष्ट्वा वैदेहीं विश्रुताः पुरुषर्षभ ।
वनं दत्तवरं दिव्यं धर्षयेयुर्वनौकसः ॥

ந சாப்ய த்ருஷ்ட்வா வைதேஹீம் விஶ்ருதா: புருஷர்ஷப ।
வனம் தத்தவரம் திவ்யம் தர்ஷயேயுர்வநௌகஸ: ॥ 24

புருஷர்ஷப	ஓ மஹானுபாவரே!
விஶ்ருதா: வநௌகஸ:	மிகவும் தெரிந்த மஹான்களான வானரர்கள்,
வைதேஹீம்	வைதேஹியை
அத்ருஷ்ட்வா	காணாமல்
தத்தவரம் ச	வரத்தால் பெற்றதும்
திவ்யம் அபி	திவ்யமானதுமான
வநம்	வனத்தை
தர்ஷயேயு: ந	சின்னபின்னமாக்கத் துணிய மாட்டார்கள்.''

श्रुत्वा कर्णसुखां वाणीं सुग्रीववदनाच्च्युताम् ।
प्राहृष्यत भृशं रामो लक्ष्मणश्च महाबलः ॥

ஶ்ருத்வா கர்ணஸுகாம் வாணீம் ஸுக்ரீவ வதநாச்ச்யுதாம் ।
ப்ராஹ்ருஷ்யத ப்ருஶம் ராமோ லக்ஷ்மணஶ்ச மஹாபல: ॥ 25

மஹாயஶா:	மஹாயசோவானான
லக்ஷ்மண:	லக்ஷ்மணர்
ஸுக்ரீவவதநாத்	ஸுக்ரீவருடைய வாயினின்று
ச்யுதாம்	வந்ததும்,
கர்ணஸுகாம்	கர்ணானந்தகரமுமான
வாணீம்	சொல்லுக்கு
ஶ்ருத்வா ச	செவிசாற்றிக் கொண்டிருக்க
ப்ருஶம்	அவரிலுமதிகமாய்
ராம:	ஸ்ரீராமர்
ப்ராஹ்ருஷ்யத	நல்ல செய்தி சமீபத்தில் இருக்கிறதென்று இப்பொழுதே மகிழ்ச்சி கொண்டார்.

श्रुत्वा दधिमुखस्येदं वचनं संप्रहृष्य सः ।
उत्तरं वनपालं च सुग्रीवः प्रत्यभाषत ॥

ஶ்ருத்வா ததிமுகஸ்யேதம் ஸுக்ரீவம்ஸ்து ப்ரஹ்ருஷ்ய ச ।
வனபாலம் உத்தரம் ஸுக்ரீவ: ப்ரத்யபாஷத ॥ 26

ஸ:	-	அந்த
ஸுக்ரீவ:	-	ஸுக்ரீவர்
ததிமுகஸ்ய	-	ததிமுகனது
இதம் வசநம்	-	இந்த மொழியை
ஶ்ருத்வா	-	கேட்டு
ஸம்ப்ரஹ்ருஷ்ய	-	மிகக் களித்து
உத்தரம்	-	அடுத்தபடி ஆக வேண்டியதைப் பற்றி
வநபாலம்	-	வனபாலருக்கு
ப்ரத்யபாஷத ச	-	இப்படி விடை தந்தார்.

प्रीतोऽस्मि सोऽहं यद् भुक्तं वनं तैः कृतकर्मभिः ।
मर्षणीयं च मे तेषां चेष्टितं कृतकर्मणाम् ॥

ப்ரீதோऽஸ்மி ஸோऽஹம் யத்புக்தம் வனம் தை: க்ருத கர்மபி: ।
மஷிதம் மர்ஷணீயம் ச மே தேஷாம் சேஷ்டிதம் க்ருதகர்மணாம் ॥ 27

க்ருதகர்மபி:	-	"காரியத்தைச் செய்து முடித்து
தை:	-	அவர்களால்
வநம்	-	வனம்
புக்தம்	-	புஶிக்கப்பட்ட இடமாகி விட்டது.
யத்	-	அப்போதிலிருந்து
ஸ:	-	அந்த
அஹம்	-	நான்
ப்ரீத:	-	ஸந்தோஷமடைந்தவனாக
அஸ்மி	-	ஆனேன்.
க்ருதகர்மணாம்	-	காரியத்தைச் செய்து முடித்த
தேஷாம் சேஷ்டிதம் ச	-	அவர்களுடைய நடத்தையும்
மே	-	என்னுடைய
மர்ஷணீயம்	-	அனுமதிக்கு உரியதாகிறது.

इच्छामि शीघ्रं हनुमत्प्रधानान् शाखामृगांस्तान् मृगराजदर्पान् ।
द्रष्टुं कृतार्थान् सह राघवाभ्यां श्रोतुं च सीताधिगमे प्रवृत्तिम् ॥

இச்சாமி ஶீக்ரம் ஹநுமத் ப்ரதாநாந்
ஶாகாம்ருகாம் ஸ்தாந் ம்ருகராஜதர்பாந் ।
த்ரஷ்டும் க்ருதார்தாந் ஸஹ ராகவாப்யாம்
ஶ்ரோதும் ச ஸீதாதிகமே ப்ரவிருத்திம் ॥ 28

ம்ருகராஜதர்பாந்	-	"ஸிம்ஹங்கள்போன்ற பராக்கிரமமுடையவர்களாய்
ஹநுமத்ப்ரதாநாந்	-	ஹனுமாரைத் தலைமையாகக் கொண்டவர்களாய்
க்ருதார்தாந்	-	காரியத்தைத் தலைக்கட்டிய

தாந்	அந்த
ஶாகாம்ருகாந்	வானரர்களை
ஶீக்ரம் த்ருஷ்டும்	சீக்கிரமே காணவும்,
ஸீதாதிகமே	ஸீதையை மீட்கும் விஷயத்தில்
ப்ரவ்ருதிம்	தத்கால ஸமாசாரத்தை
ஶ்ரோதும் ச	கேட்கவும்,
ராகவாப்யாம் ஸஹ	ஸ்ரீ ராகவர்களோடு கூடவே
இச்சாமி	நான் அவாவுடன் இருக்கிறேன்.''

प्रीतिस्फीताक्षौ सम्प्रहृष्टौ कुमारौ दृष्ट्वा
सिद्धार्थौ वानराणां च राजा ।

अङ्गैः संहृष्टैः कर्मसिद्धिं विदित्वा
बाह्वोरासन्नां सोऽतिमात्रं ननन्द ॥

ப்ரீதிஸ்பீதாக்ஷெள ஸம்ப்ரஹ்ருஷ்டௌ குமாரௌ
த்ருஷ்ட்வா ஸித்தார்தௌ வாநராணாம் ச ராஜா ।
அங்கை: ஸம்ஹ்ருஷ்டை: கர்மஸித்திம் விதித்வா
பாஹ்வோராஸந்நாம் ஸோऽதிமாத்ரம் நநந்த ॥ 29

வாநராணாம்	வானரர்களுக்கு
ராஜா ஸ:	அரசரான அவர்
குமாரௌ ச	அரச குமாரர்கள் இருவரையும்
ஸித்தார்தௌ	காரியம்ஸித்தி அடைந்தவர்களாய்
ஸம்ப்ரஹ்ருஷ்டௌ	குதூஹலித்திருப்பவர்களாய்
ப்ரீதிஸ்பீதாக்ஷெள	ப்ரீதியினால் மலர்ந்த கண்களை உடையவராய்
த்ருஷ்ட்வா	கண்டு
கர்மஸித்திம்	காரிய ஸித்தியை
பாஹ்வோ:	கைகளுக்கு
ஆஸந்நாம்	கிட்டியிருப்பதாய்
விதித்வா	நினைத்து
ஸம்ஹ்ருஷ்டை:	சந்தோஷாதிசயத்தால் சிலிர்த்திருக்கின்ற
அங்கை:	அவயவங்களோடு
அதிமாத்ரம்	அடக்க முடியாதபடி
நநந்த	களி கூர்ந்தார்.

இத்யார்ஷே ஸ்ரீமத் ராமாயணே வால்மீகீயே ஆதிகாவ்யே
சதுர்விம்ஶதி ஸஹஸ்ரிகாயாம் ஸம்ஹிதாயாம் ஸுந்தர காண்டே
ஸுக்ரீவ ஹர்ஷோ நாம த்ரிஷஷ்டிதம: ஸர்க: ॥

சது: ஷஷ்டிதம: ஸர்க: - 64

सुग्रीवेणैवमुक्तस्तु हृष्टो दधिमुखः कपिः ।
राघवं लक्ष्मणं चैव सुग्रीवं चाभ्यवादयत् ॥
ஸுக்ரீவேணைவ முக்தஸ்து ஹ்ருஷ்டோ ததிமுக: கபி: ।
ராகவம் லக்ஷ்மணம் சைவ ஸுக்ரீவம் சாப்யவாதயத் ॥ 1

ஸுக்ரீவேண	-	ஸுக்ரீவரால்
ஏவம்	-	இப்படி
உக்த:	-	சொல்லக் கேட்ட
ததிமுக:	-	ததிமுகன் என்ற
கபி:	--	வானரன்
து	-	இப்பொழுது
ஹ்ருஷ்ட: ஏவ	-	அகமகிழ்ந்தவனாகவே,
ராகவம்	-	ஸ்ரீராகவரையும்,
லக்ஷ்மணம் ச	-	லக்ஷ்மணரையும்
ஸுக்ரீவம் ச	-	ஸுக்ரீவரையும்
அப்யவாதயத்	-	அபிவாதனம் பண்ணினான்.

स प्रणम्य च सुग्रीवं राघवौ च महाबलौ ।
वानरैः सहितः शूरैर्दिवमेवोत्पपात ह ॥
ஸ ப்ரணம்ய ச ஸுக்ரீவம் ராகவௌ ச மஹாபலௌ ।
வாநரை: ஸஹித: ஶௌரைர் திவமேவோத்பபாத ஹ ॥ 2

மஹாபலௌ	-	மஹா பலிஷ்டர்களான
ராகவௌ ச	-	ஸ்ரீராகவர்களையும்
ஸுக்ரீவம் ச	-	சுக்ரீவரையும்
ஸ:	-	அவன்
ப்ரணம்ய	-	தாள் பணிந்து
ஸஹிதை:	-	கூடி நின்ற
ஶௌரை:	-	சூரர்களான
வாநரை:	-	வானரர்களுடன்
திவம் ஏவ	-	ஆகாச மார்க்கத்திலே
உத்பபாத	-	கிளம்பிச் சென்றான்
ஹ	-	காண்!

स यथैवागतः पूर्वं तथैव त्वरितं गतः ।
निपत्य गगनाद्भूमौ तद्वनं प्रविवेश ह ॥

ஸ யதைவாகத: பூர்வம் ததைவ த்வரிதம் கத: ।
நிபத்ய ககநாத்பூமௌ தத்வனம் ப்ரவிவேஶ ஹ ॥ 3

ஸ:	- அவன்
பூர்வம்	- முதலில்
யதா ஏவ	- எப்படி
ஆகத:	- வந்தானோ
ததா ஏவ	- அப்படியே
த்வரிதம்	- வேகமாய்
கத:	- சென்றான்
ககநாத் ஹ	- ஆகாயத்தினின்றே
பூமௌ	- பூமியில்
நிபத்ய	- இறங்கி
தத் வநம்	- அந்த வனத்தில்
ப்ரவிவேஶ	- புகுந்தான்.

स प्रविष्टो मधुवनं ददर्श हरियूथपान् ।
विमदानुत्थितान् सर्वान् मेहमानान् मधूदकम् ॥

ஸ ப்ரவிஷ்டோ மதுவனம் ததர்ஶ ஹரியூதபாந் ।
விமதாநுத்திதாந் ஸர்வாந் மேஹமாநாந் மதூதகம் ॥ 4

மதுவநம்	- மது வனத்தில்
ப்ரவிஷ்ட: ஸ:	- நுழைந்த அவன்
ஹரியூதபாந்	- வானர வீரர்கள்
ஸர்வாந்	- எல்லோரையும்
விமதாந்	- மயக்கம் தெளிந்து
உத்திதாந்	- எழுந்தவர்களாயும்
மதூதகம்	- குடித்த மதுவை
மேஹமாநாந்	- சிறுநீர் விட்டுக் கொண்டிருப்பவர்களாயும்
ததர்ஶ	- கண்டான்.

स तानुपागमद्वीरो बद्ध्वा करपुटाञ्जलिम् ।
उवाच वचनं श्लक्ष्णमिदं हृष्टवदङ्गदम् ॥

ஸ தாநுபாகமத்வீரோ பத்த்வா கரபுடாஞ்ஜலிம் ।
உவாச வசனம் ஶ்லக்ஷ்ணமிதம் ஹ்ருஷ்டவதங்கதம் ॥ 5

ஸ: வீர:	- அந்த வீரன்
தாந்	- அவர்களை
உபாகமத்	- நெருங்கினான்;
அங்கதம்	- அங்கதனைப் பார்த்து,
கரபுடாஞ்ஜலிம்	- கையில் அஞ்சலி பந்தத்தை
பத்த்வா	- செய்து கொண்டு
ஹ்ருஷ்டவத்	- அகமகிழ்ச்சி கொண்டு

இதம்	-	பின்கண்ட
ஶ்லக்ஷ்ணம்	-	யதார்த்தமான
வசநம்	-	மொழியை
உவாச	-	விளம்பினான்.

सौम्य रोषो न कर्तव्यो यदेभिरभिवारितः ।
अज्ञानाद्रक्षिभिः क्रोधाद्भवन्तः प्रतिषेधिताः ॥

ஸௌம்ய ரோஷோ ந கர்தவ்யோ யதேபிரபிவாரித: ।
அஜ்ஞாநாத்ரக்ஷிபி: க்ரோதாத் பவந்த: ப்ரதிஷேதிதா: ॥ 6

ஸௌம்ய	-	"சாந்த குணசீலனே!
பவந்த:	-	நீங்கள்
ரக்ஷிபி:	-	காவலாளர்களால்
அஜ்ஞாநாத்	-	தெரியாத்தனத்தாலும்
க்ரோதாத்	-	கோபத்தாலும்
ப்ரதிஷேதிதா:	-	தடுக்கப்பட்டீர்கள்.
ஏபி:	-	இவர்களால்
அபிவாரித: யத்	-	தடுக்கப்பட்டதைப் பற்றி
ரோஷ:	-	கோபம்
ந கர்தவ்ய:	-	கொள்ள வேண்டாம்.

युवराजस्त्वमीशश्च वनस्यास्य महाबल ।
मौर्ख्यात् पूर्वं कृतो दोषस्तं भवान् क्षन्तुमर्हति ॥

யுவராஜஸ் த்வமீஶஶ்ச வனஸ்யாஸ்ய மஹாபல ।
மௌர்க்யாத் பூர்வம் க்ருதோ தோஷஸ்தம் பவாந் க்ஷந்து மர்ஹதி ॥ 7

மஹாபல	-	"மஹா வல்லவனே!
யுவராஜ:	-	யுவராஜரான
த்வம்	-	நீர்
அஸ்ய	-	இந்த
வநஸ்ய ச	-	வனத்திற்கும்
ஈஶ:	-	யஜமானர்;
மௌர்க்யாத்	-	மூடத் தனத்தால்
பூர்வம்	-	முன்பு
தோஷ: க்ருத:	-	பிழை செய்யப்பட்டது;
தம்	-	அதை
பவாந்	-	தாம்
க்ஷந்தும் அர்ஹதி	-	பொறுத்தருள வேண்டும்.

आख्यातं हि मया गत्वा पितृव्यस्य तवानघ ।
इहोपयानं सर्वेषामेतेषां वनचारिणाम् ॥

ஆக்யாதம் ஹி மயா கத்வா பித்ருவ்யஸ்ய தவாநக ।
இஹோபயாநம் ஸர்வேஷாமேதேஷாம் வனசாரிணாம் ॥ 8

அநக - ''நிரபராதியே!
ஏதேஷாம் - இந்த
ஸர்வேஷாம் வநசாரிணாம்-எல்லா வானரர்களுடைய
இஹ உபயாதம் - இங்கு திரும்பி வருதலாகிய செய்தி
தவ - உன்
பித்ருவ்யஸ்ய - சிற்றப்பனுக்கு
மயா ஹி - என்னாலேயே
கத்வா - விரைந்தோடி
ஆக்யாதம் - தெரிவிக்கப்பட்டது.

स त्वदागमनं श्रुत्वा सहैभिर्हरियूथपैः ।
प्रहृष्टो न तु रुष्टोऽसौ वनं श्रुत्वा प्रधर्षितम् ॥

ஸ த்வதாகமனம் ஶ்ருத்வா ஸஹைபிர் ஹரியூதபை: ।
ப்ரஹ்ருஷ்டோ ந து ருஷ்டோऽஸௌ வனம் ஶ்ருத்வாப்ரதர்ஷிதம்॥ 9

ஏபி: - ''இந்த
ஹரியூதபை: - வானர வீரர்களுடன்
ஸஹ - கூடி
த்வதாகமநம் - தாம் வந்த செய்தியை
ஶ்ருத்வா - கேட்டு
ஸ: - அவர்
ப்ரஹ்ருஷ்ட: - அதிக ஸந்தோஷமடைந்தார்.
அஸௌ - இவர்
வநம் - வனம்
ப்ரதர்ஷிதம் - அழிந்ததை
த்ருஷ்ட்வா து - அறிந்தும்
ந ருஷ்ட: - சினம் கொண்டாரில்லை.

प्रहृष्टो मां पितृव्यस्ते सुग्रीवो वानरेश्वरः ।
शीघ्रं प्रेषय सर्वांस्तानिति होवाच पार्थिवः ॥

ப்ரஹ்ருஷ்டோ மாம் பித்ருவ்யஸ்தே ஸுக்ரீவோ வாநரேஶ்வர: ।
ஶீக்ரம் ப்ரேஷய ஸர்வாம்ஸ்தாநிதி ஹோவாச பார்திவ: ॥ 10

தே - ''உனக்கு
பித்ருவ்ய: - சிற்றப்பனும்
வாநரேஶ்வர: - வானர ராஜருமான
ஸுக்ரீவ: - ஸுக்ரீவ

பார்த்திவ: - மஹாராஜர்
ப்ரஹ்ருஷ்ட: ஹ - மிக ஸந்தோஷப்படுவராயே,
தாந் - அவர்கள்
ஸர்வாந் - யாவரையும்
ஶீக்ரம் - விரைவில்
ப்ரேஷ்ய - அனுப்பி விடு'
இதி - என்று
மாம் - எனக்கு
உவாச - உத்தரவளித்தார்.''

श्रुत्वा दधिमुखस्यैतद्वचनं श्लक्ष्णमङ्गदः ।
अब्रवीत् तान् हरिश्रेष्ठो वाक्यं वाक्यविशारदः ॥

ஶ்ருத்வா ததிமுகஸ்யைதத் வசனம் ஶ்லக்ஷ்மணமங்கத: ।
அப்ரவீத்தான் ஹரி ஶ்ரேஷ்டோ வாக்யம் வாக்ய விஶாரத: ॥ 11

வாக்யவிஶாரத: - வார்த்தை அறிபவரில் சிறந்தவனும்
ஹரிஶ்ரேஷ்ட: - வானரச் சிரேஷ்டனுமான
அங்கத: - அங்கதன்
ததிமுகஸ்ய - ததிமுகனுடைய
ஶ்லக்ஷ்ணம் - மதுரமான
இதம் - இந்த
வசநம் - வசனத்தை
ஶ்ருத்வா - கேட்டு
தாந் - அவர்களைப் பார்த்து
வாக்யம் - பின்வரும் மொழியை
அப்ரவீத் - உரைத்தான்.

शङ्के श्रुतोऽयं वृत्तान्तो रामेण हरियूथपाः ।
तत् क्षमं नेह नः स्थातुं कृते कार्ये परन्तपाः ॥

ஶங்கே ஶ்ருதோऽயம் வ்ருத்தாந்தோ ராமேண ஹரியூதபா:।
தத் க்ஷமம் நேஹ ந ஸ்தாதும் க்ருதேகார்யே பரந்தபா: ॥ 12

ஹரியூதபா: - ''வானரத் தலைவர்களே!
அயம் வ்ருதாந்த: - இந்த ஸமாசாரம்
ராமேண - ஸ்ரீராமரால்
ஶ்ருத: - தெரிந்து கொள்ளப்பட்டதாக
ஶங்கே - நான் அறிகிறேன்.
தத் - ஆகையால்
பரந்தபா: - பகை வெல்லுபவர்களே!
அகார்யே - அனாவசியமான
க்ருதே - ஆட்டத்தில்

இஹ	-	இங்கு
ஸ்தாதும்	-	காலஹரணம் செய்வதற்கு
ந:	-	நமக்கு
க்ஷணம் ந	-	அவகாசம் இல்லை.

पीत्वा मधु यथाकामं विश्रान्ता वनचारिणः ।
कि शेषं गमनं तत्र सुग्रीवो यत्र मे गुरुः ॥
பீத்வா மது யதாகாமம் விஶ்ராந்தா வன சாரிண: ।
கிம் ஶேஷம் கமனம் தத்ர ஸுக்ரீவோ யத்ர மே குரு: ॥ 13

வநசாரிண:	-	"வானரர்காள்!
யதாகாமம்	-	வேண்டிய வரையில்
மது பீத்வா	-	மதுவைப் பருகி
விஶ்ராந்தா:	-	விடாய் தீர்ந்தீர்கள்.
மே	-	என்
குரு:	-	ஐயனான
ஸுக்ரீவ:	-	ஸுக்ரீவர்
யத்ர	-	எவ்விடத்தில் இருக்கின்றாரோ
தத்ர	-	அவ்விடத்திற்கு
கமநம்	-	போய்ச் சேருவது
ஶேஷம்	-	தவிர (வேறு)
கிம்	-	என்ன இருக்கிறது?

सर्वे यथा मां वक्ष्यन्ति समेत्य हरियूथपाः ।
तथास्मि कर्ता कर्तव्ये भवद्भिः परवानहम् ॥
ஸர்வே யதா மாம் வக்ஷ்யந்தி ஸமேத்ய ஹரியூதபா: ।
ததாஸ்மி கர்தா கர்தவ்யே பவத்பி: பரவாநஹம் ॥ 14

ஹரியூதபா:	-	"கபிவரர்கள்
ஸர்வே	-	எல்லோரும்
ஸமேத்ய	-	ஒன்றாகக் கூடி
மாம்	-	எனக்கு
யதா	-	எவ்வாறு
வக்ஷ்யந்தி	-	விதிக்கின்றனரோ,
ததா	-	அவ்வாறு
கர்தா	-	செய்யவேண்டுபவனாய்
கர்தவ்யே	-	செய்ய வேண்டிய காரியத்தில்
அஹம்	-	நான்
பவத்பி:	-	உங்களால்
பரவாந்	-	ஏவப்பட வேண்டியவனாக
அஸ்மி	-	ஆகிறேன்.

नाज्ञापयितुमीशोऽहं युवराजोऽस्मि यद्यपि ।
अयुक्तं कृतकर्माणो यूयं धर्षयितुं मया ॥

நாஞாபயிது மீஶோऽஹம் யுவராஜோऽஸ்மி யத்யபி ।
அயுக்தம் க்ருதகர்மாணோ யூயம் தர்ஷயிதும் மயா ॥ 15

க்ருதகர்மாணஃ - ''காரியங்களைப்பூர்த்திசெய்துவைத்தவர்களான
யூயம் - நீங்கள்
மயா - என்னால்
தர்ஷயிதும் அயுக்தம் - அதிகாரம் செய்யப்படுதல் தகாது.
யதி - ஆதலின்
அஹம் - நான்
யுவராஜஃ - இளவரசாய்
அஸ்மி - இருக்கிறேன்
அபி - என்றாலும்
ஆக்ஞாபயிதும் - ஆக்ஞாபிக்க
ஈஶஃ - அதிகாரமுடையவனாக
ந - இல்லை.''

ब्रुवतश्चाङ्गदस्यैवं श्रुत्वा वचनमव्ययम् ।
प्रहृष्टमनसो वाक्यमिदमूचुर्वनौकसः ॥

ப்ருவதஶ்சாங்கதஸ்யைவம் ஶ்ருத்வா வசனமவ்யயம் ।
ப்ரஹ்ருஷ்டமனஸோ வாக்யமித மூசுர்வனௌகஸ: ॥ 16

ஏவம் - இப்படி
ப்ருவதஃ - சொல்லுகிற
அங்கதஸ்ய ச - அங்கதனுடைய
அவ்யயம் - அழியாப் பலன் தரக் கூடிய
வசநம் - சொல்லை
வநௌகஸஃ - வானரர்கள்
ஶ்ருத்வா - கேட்டு
ப்ரஹ்ருஷ்டமநஸஃ - அடங்காத மகிழ்ச்சியை அடைந்த மனத்தினர்களாய்
இதம் - பின்வரும்
வாக்யம் - பதிலை
ஊசுஃ - சொன்னார்கள்.

एवं वक्ष्यति को राजन् प्रभुः सन् वानरर्षभः ।
ऐश्वर्यमदमत्तो हि सर्वोऽहमिति मन्यते ॥

ஏவம் வக்ஷ்யதி கோ ராஜன் ப்ரபுஃ ஸந் வாநரர்ஷப: ।
ஐஶ்வர்ய மத மத்தோ ஹி ஸர்வோऽஹமிதி மன்யதே ॥ 17

வாநரர்ஷப	-	"வானரோத்தமரே!
ராஜந்	-	அரசே!
ப்ரபுஃஸந்	-	யஜமானனாக இருக்கிற
கஃ	-	எவன்
ஏவம்	-	இவ்வண்ணம்
வக்ஷ்யதி	-	சொல்லுவான்?
ஐஶ்வர்யமதமத்தஃ	-	செல்வச் செருக்கினால் மதம் கொண்டவன்
ஸர்வஃ அஹம்	-	'எல்லாம் நானே'
இதி	-	என்று
மந்யதே ஹி	-	எண்ணிக் கொள்ளுகிறான் அன்றோ!

तव चेदं सुसदृशं वाक्यं नान्यस्य कस्यचित् ।
संनतिर्हि तवाख्याति भविष्यच्छुभयोग्यताम् ॥

தவ சேதம் ஸுஸத்ருஶம் வாக்யம் நான்யஸ்ய கஸ்யசித் ।
ஸந்நதிர்ஹி தவாக்யாதி பவிஷ்யச் சுபயோக்யதாம் ॥ 18

இதம்	-	"இந்த
வாக்யம்	-	வார்த்தை
தவ ச	-	உமக்கேதான்
ஸுஸத்ருஶம்	-	ஏற்றதாகும்.
அந்யஸ்ய	-	வேறு
கஸ்யசித் ஹி	-	எவர்க்கும்
ந ஹி	-	ஏலாது,
ஸந்நதிஃ	-	தணிந்திருப்பது
தவ	-	உமக்கு
பவிஷ்யத்	-	இனி வரப் போகிற பாக்கியத்தின்
சுபயோக்யதாம்		அபிவிருத்தியை
ஆக்யாதி	-	தெரிவிக்கிறது.

सर्वे वयमपि प्राप्तास्तत्र गन्तुं कृतक्षणाः ।
स यत्र हरिवीराणां सुग्रीवः पतिरव्ययः ॥

ஸர்வே வயமபி ப்ராப்தாஸ் தத்ர கந்தும் க்ருதக்ஷணா: ।
ஸ யத்ர ஹரிவீராணாம் ஸுக்ரீவ: பதிரவ்யய: ॥ 19

ஹரிவீராணாம்	-	"வானர வீரர்களுக்கு
பதிஃ	-	பதியும்
அவ்யயஃ	-	காரிய நிர்வாகங்களில் வெகு ஜாக்கிரதையுடையவருமான
ஸஃ ஸுக்ரீவஃ	-	அந்த ஸுக்ரீவர்,
யத்ர	-	எங்கிருக்கின்றனரோ
தத்ர கந்தும்	-	அவ்விடம் செல்ல
க்ருதக்ஷணாஃ	-	உத்தரவை எப்போது எப்போது என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த

வயம்	-	நாங்கள்
ஸர்வே அபி	-	எல்லோரும்
ப்ராப்தாஃ	-	இதோ வந்து விட்டோம்.

त्वया ह्यनुक्तैर्हरिभिर्नैव शक्यं पदात् पदम् ।
क्वचिद्गन्तुं हरिश्रेष्ठ ब्रूमः सत्यमिदं तु ते ॥

த்வயா ஹ்யநுக்தைர் ஹரிபிர்நைவ ஶக்யம் பதாத் பதம் ।
க்வசித் கந்தும் ஹரிஶ்ரேஷ்ட ப்ரூம: ஸத்யமிதம் து தே ॥ 20

த்வயா ஹி	-	''உம்மாலேயே
அநுக்தைஃ	-	விடையளிக்கப் பெறாத
ஹரிபிஃ	-	வானரர்களால்
க்வசித் கந்தும்	-	ஓரிடம் போக
பதாத் பதம் ஏவ	-	ஓரடியாகிலும் எடுத்து வைத்தல் என்பது
ஶக்யம் ந	-	செய்ய உரியதன்று.
ஹரிஶ்ரேஜ்ட	-	வானரச் சிரேஷ்டரே!
தே	-	உமக்கு
இதம்	-	இதை
ஸத்யம் து	-	ஸத்தியமாகவே
ப்ரூமஃ	-	சொல்லுகிறோம்.''

एवं तु वदतां तेषामङ्गदः प्रत्यभाषत ।
बाढं गच्छाम इत्युक्त्वा खमुत्पेतुर्महाबलाः ॥

ஏவம் து வததாம் தேஷாமங்கத: ப்ரத்யபாஷத ।
பாடம் கச்சாம இத்யுக்த்வா கமுத்பேதுர் மஹாபலா: ॥ 21

ஏவம்	-	என்றிப்படி
தேஷாம்	-	அவர்கள்
வததாம்	-	சொல்ல,
அங்கத।	-	அங்கதன்
பாடம்	-	'சபாஷ்!
கச்சாமஃ	-	போவோம்'
இதி	-	என்று
ப்ரத்யபாஷத	-	பதில் சொன்னார்.
உக்த்வா து	-	இப்படிச் சொன்னதுமே (சொன்னது காதில் பட்டதுமே)
மஹாபலாஃ	-	மிக்க பலவான்கள்
கம்	-	ஆகாசத்தில்
உத்பேதுஃ	-	கிளம்பி விட்டார்கள்.

उत्पतन्तमनूत्पेतुः सर्वे ते हरियूथपाः ।
कृत्वाकाशं निराकाशं यन्त्रोत्क्षिप्ता इवाचलाः ॥

உத்பதந்தமநூத்பேது: ஸர்வே தே ஹரியூதபா: ।
க்ருத்வா காஶம் நிராகாஶம் யந்த்ரோத்க்ஷிப்தா இவாசலா: ॥ 22

தே	அந்த
ஹரியூதபாঃ	வானர வீரர்கள்
ஸர்வே	எல்லோரும்
யந்த்ரோத்க்ஷிப்தாঃ	யந்திரத்தால் எழுப்பப்பட்டுக் கிளம்பிய
அசலாঃ இவ	பர்வதங்கள்போல்
ஆகாஶம்	ஆகாசத்தை
நிராகாஶம்	அவகாசமில்லாததாய்
க்ருத்வா	செய்து கொண்டு
உத்பதந்தம்	முன் சென்றவனை
அநூத்பேதுঃ	பின்பற்றிப் பறந்து சென்றார்கள்.

तेऽम्बरं सहसोत्पत्य वेगवन्तः प्लवङ्गमाः ।
विनदन्तो महानादं घना वातेरिता यथा ॥

தேऽம்பரம் ஸஹஸோத் பத்ய வேகவந்த: ப்லவங்கமா: ।
விநதந்தோ மஹாநாதம் கநா வாதேரிதா யதா ॥ 23

வேகவந்தঃ	வேகசாலிகளான
தே ப்லவங்கமாঃ	அந்த வானரர்கள்
அம்பரம்	ஆகாசத்தில்
ஸஹஸா	விரைந்து
உத்பத்ய	பறந்து கொண்டு
வாதேரிதாঃ கநாঃ	வாயுவினால் துரத்தப்பட்டமேகங்கள்
யதா	எப்படியோ அப்படி
மஹாநாதம்	கம்பீரமான சப்தத்தை
விநதந்தঃ	கோஷித்தார்கள்.

अङ्गदे समनुप्राप्ते सुग्रीवो वानराधिपः ।
उवाच शोकोपहतं रामं कमललोचनम् ॥

அங்கதே ஸமநுப்ராப்தே ஸுக்ரீவோ வாநராதிப ।
உவாச ஶோகோபஹதம் ராமம் கமலலோசனம் ॥ 24

அங்கதே	அங்கதன்
ஸமநுப்ராப்தே	நெருங்கி வந்து கொண்டிருக்கையில்
வாநராதிபঃ	வானரகோனான
ஸுக்ரீவঃ	ஸுக்ரீவர்
ஶோகோபஹதம்	சோகத்தால் கசிந்த நெஞ்சினராய்
கமலலோசநம்	தாமரைக் கண்ணரான
ராமம்	ஸ்ரீராமரைப் பார்த்து
உவாச	பின்கண்டபடி விண்ணப்பம் செய்தார்.

समाश्वसिहि भद्रं ते दृष्टा देवी न संशयः ।
नागन्तुमिह शक्यं तैरतीते समये हि नः ॥

ஸமாஶ்வஸிஹி பத்ரம் தே த்ருஷ்டா தேவீ ந ஸம்ஶய: ।
நாகந்துமிஹ ஶக்யம் தைரதீதே ஸமயே ஹி ந: ॥ 25

ஸமாஶ்வஸிஹி	''தேறியருள!
தே	தேவரீருக்கு
பத்ரம்	க்ஷேமமே!
தேவீ	தேவி
த்ருஷ்டா	கண்டுபிடிக்கப்பட்டாள்.
ஸம்ஶய: ந	ஸந்தேஹம் இல்லை.
ஹி	ஏனென்றால்
ந: ஸமயே	நமது (விதித்த) தவணை
அதீதே	கடந்த பிறகு
தை:	அவர்களால்
இஹ	இங்கு
ஆகந்தும்	திரும்பி வருவதற்கு
ஶக்யம்	துணிவு
ந	இராது.

न मत्सकाशमागच्छेत् कृत्ये हि विनिपातिते ।
युवराजो महाबाहुः प्लवतां प्रवरोऽङ्गदः ॥

ந மத்ஸாகாஶ மாகச்சேத் க்ருத்யே ஹி விநிபாதிதே ।
யுவராஜோ மஹாபாஹு: ப்லவதாம் ப்ரவரோ஽ங்கத: ॥ 26

க்ருத்யே	''போன காரியம்
விநிபாதிதே	கை கூடாத பக்ஷத்தில்
ப்லவதாம்	வானரர்களுக்கு
ப்ரவர:	தலைவனாய்
மஹாபாஹு:	மஹாபாஹுவான
யுவராஜ:	யுவராஜாவான
அங்கத:	அங்கதன்
மத்ஸகாஶம்	என்னிடம்
ந ஆகச்சேத்	அணுக மாட்டான்;
ஹி	நிச்சயம்.

यद्यप्यकृतकृत्यानामीदृशः स्यादुपक्रमः ।
भवेत् स दीनवदनो भ्रान्तविप्लुतमानसः ॥

யத்யப்ய க்ருதக்ருத்யாநாமீத்ருஶ: ஸ்யாது பக்ரம: ।
பவேத் ஸ தீநவதநோ ப்ராந்தவிப்லுத மானஸ: ॥ 27

அக்ருதக்ருத்யாநாம்	''காரியத்தைச்செய்துமுடிக்காதவர்களுடைய
உபக்ரம:	பரிஹாரம்
ஈத்ருஶ:	இப்பேர்ப்பட்டதாய்
ஸ்யாத்	இருக்கிறது
யதி அபி	என்கிற விஷயத்திலோ
ஸ:	அவன்
ப்ராந்தவிப்லுதமாநஸ:	திகிலடைந்து கலங்கிய மனத்தினனாய்
தீநவதந:	முகம் வாடியவனாய்
பவேத்	இருப்பான்.

पितृपैतामहं चैतत् पूर्वकैरभिरक्षितम् ।
न मे मधुवनं हन्यादहृष्टः प्लवगेश्वरः ॥

பித்ருபைதாமஹம் சைதத் பூர்வகைரபிரக்ஷிதம் ।
ந மே மதுவனம் ஹன்யாத ஹ்ருஷ்ட: ப்லவகேஸ்வர: ॥ 28

பித்ருபைதாமஹம்	''தலைமுறை தலைமுறையாய் வந்ததும்
பூர்வகை:	முன்னோர்களால்
அபிரக்ஷிதம் ச	பரிவுடன் காக்கப்பட்டு வந்ததுமான
மே	எனது
ஏதத் மதுவநம்	இந்த மதுவனவத்தை
ப்லவகேஸ்வர:	வானராதிபன்
அஹ்ருஷ்ட:	உற்சாகமில்லாதவனாய்
ந ஹநயாத்	அழிக்க மாட்டான்.

कौसल्या सुप्रजा राम समाश्वसिहि सुव्रत ।
दृष्टा देवी न सन्देहो न चान्येन हनूमता ॥

கௌஸல்யா ஸுப்ரஜா ராம ஸமாஸ்வஸிஹி ஸுவ்ரத ।
த்ருஷ்டா தேவீ ந ஸந்தேஹோ ந சான்யேந ஹநூமதா ॥ 29

கௌஸல்யாஸுப்ரஜா	''கௌஸல்யையின் செல்வக் குமாரரே!
ராம	ஸ்ரீராம!
ஸுவ்ரத	நல்விரதம் பூண்டவரே!
ஸமாஸ்வஸிஹி	தேறியருள!
ஹநூமதா ச	ஹனுமானாலேயே
தேவீ	தேவி
த்ருஷ்டா	கண்டுபிடிக்கப்பட்டாள்;
அந்யேந	வேறொருவனாலும்
ந	முடியாது;
ஸந்தேஹ:	ஸந்தேஹஷம்
ந	இல்லை.

न ह्यन्यः कर्मणो हेतुः साधनेऽस्य हनूमतः ।
हनूमति हि सिद्धिश्च मतिश्च मतिसत्तम ॥
व्यवसायश्च वीर्यं च सूर्ये तेज इव ध्रुवम् ॥

ந ஹ்யன்ய: கர்மணோ ஹேது: ஸாதநேऽஸ்ய ஹநூமத: ।
ஹநூமதி ஹி ஸித்திஶ்ச மதிஶ்ச மதிஸத்தம ॥
வ்யவஸாயஶ்ச வீர்யஞ்ச ஸூர்யே தேஜ இவ த்ருவம் ॥ 30

மதிஸத்தம	-	''ஹே மஹாப்ராக்ஞரே!
அஸ்ய கர்மண:	-	இந்தக் காரியத்தின்
ஸாதநே	-	நிர்வாக விஷயத்தில்
ஹநூமத:	-	ஹனுமாரைத் தவிர
அந்ய: ஹி	-	வேறொருவனும்
ஹேது:	-	ஹேதுவாக
ந	-	முடியாது;
ஹநூமதி ஹி	-	ஹனுமாரிடத்தில் மாத்திரம்
ஸித்தி: ச	-	ஸித்தியும்
மதி: ச	-	மதியும்,
வ்யவஸாய: ச	-	தீர்மானமும்,
வீர்ய ச	-	பராக்கிரமும் (இவை ஒவ்வொன்றும்)
ஸூர்யே	-	ஸூர்யனிடத்தில்
தேஜ:	-	ஒளி
இவ	-	எப்படியோ அப்படியே
த்ருவம்	-	விடாமலே பற்றியிருக்கிறது.

जाम्बवान् यत्र नेता स्यादङ्गदश्च बलेश्वरः ।
हनुमांश्चाप्यधिष्ठाता न तस्य गतिरन्यथा ॥
मा भूश्चिन्तासमायुक्तः सम्प्रत्यमितविक्रम ॥

ஜாம்பவாந் யத்ர நேதா ஸ்யாதங்கதஶ்ச பலேஶ்வர: ।
ஹநூமாம் ஶ்சாப்ய திஷ்டாதா ந தஸ்ய கதிரந்யதா ॥ 31
மா பூஶ்சிந்தாஸமாயுக்த: ஸம்ப்ரத்யமிதவிக்ரம ॥

அபி	-	''அதுவும் தவிர
யத்ர	-	எந்தக் காரியத்தில்
அங்கத:	-	அங்கதன்
பலேஶ்வர:	-	ஸேனைத் தலைவனாய்
ஸ்யாத்	-	விளங்குகிறானோ,
ஜாம்பவாந்	-	ஜாம்பவந்தர்
நேதா	-	விசாரணைத் தலைவராய்
ச	-	அப்படியே விளங்குகிறாரோ,
ஹநுமான்	-	ஹனுமந்தர்

அதிஷ்டாதா ச - எதை எதை யார் யார் எப்பொழுது செய்ய வேண்டும் என்பதைத் திட்டம் செய்வோராய் அப்படியே விளங்குகிறாரோ
தஸ்ய கதி: - அதனுடைய பலன்
அந்யதா - உத்தேசத்திற்கு வேறாக
ந - இராது.
அமிதவிக்ரம - அளவிலாத ஆற்றலுடையோய்!
சிந்தாஸமாயுக்த: - கவலையில் மூழ்கியிருப்பவராக
ஸம்ப்ரதி - இப்பொழுது
மா பூ: - ஆக வேண்டாம்.''

ततः किलकिलाशब्दं शुश्रावासन्नमम्बरे ।
हनुमत्कर्मदृप्तानां नर्दतां काननौकसाम् ॥
किष्किन्धामुपयातानां सिद्धिं कथयतामिव ॥

தத: கிலகிலாஶப்தம் ஶுஶ்ராவாஸந்நமம்பரே ।
ஹநுமத் கர்ம த்ருப்தாநாம் நர்ததாம் காநநௌகஸாம் ॥
கிஷ்கிந்தாமுபயாதாநாம் ஸித்திம் கதய தாமிவ ॥ 33

தத: - அப்பொழுது
ஹநூமத்கர்ம - ஹனுமாருடைய செயலால் கர்வம்
த்ருப்தாநாம் படைத்தவர்களாய்
ஸித்திம் - கார்ய ஸித்தியை
கதயதாம் - கூறுபவர்களுடைய
இவ' - செயல் எப்படியோ அப்படி
நர்ததாம் - சத்தமிட்டுக் கொண்டு
கிஷ்கிந்தாம் - கிஷ்கிந்தையை
ஆஸந்நம் - கிட்டி
உபயாதாநாம் - வந்து சேர்ந்த
காநநௌகஸாம் - வானரர்களின்
கிலகிலாஶப்தம் - கிலுகிலுவென்ற சத்தத்தை
அம்பரே - ஆகாசத்தில்
ஶுஶ்ராவ - கேட்டான்.

ततः श्रुत्वा निनादं तं कपीनां कपिसत्तमः ।
आयताञ्चितलाङ्गूलः सोऽभवद्धृष्टमानसः ॥

தத: ஶ்ருத்வா நிநாதம் தம் கபீநாம் கபிஸத்தம: ।
ஆயதாஞ்சிதலாங்கூல: ஸோऽபவத்த்ருஷ்ட மானஸ: ॥ 34

தத: - அப்பொழுது
கபீநாம் - வானரர்களின்
தம் நிநாதம் - அந்த சத்தத்தை

ஶ்ருத்வா	கேட்டு
ஸ:	அந்த
கபிஸத்தம:	வானரோத்தமர்
ஆயாதாஞ்சிதலாங்கூல:	வளைந்து கிடந்த வாலை நீட்டிக் கொண்டவராய்
ஹ்ருஷ்டமாநஸ:	ஸந்துஷ்டசித்தராய்
அபவத்	விளங்கினார்.

आजग्मुस्तेऽपि हरयो रामदर्शनकाङ्क्षिण: ।
अङ्गदं पुरत: कृत्वा हनूमन्तं च वानरम् ॥

ஆஜக்முஸ்தேऽபி ஹரயோ ராமதர்ஶந காங்க்ஷிண: ।
அங்கதம் புரத: க்ருத்வா ஹநூமந்தம் ச வாநரம் ॥ 35

ராமதர்ஶநகாங்க்ஷிண:	ஸ்ரீராமதர்சனத்தை அடையஅவாக்கொண்ட
தே ஹரய: அபி	அந்த வானரர்களும்
வாநரம்	வானரரான
அங்கதம்	அங்கதரையும்
ஹநூமந்தம் ச	ஹனுமந்தரையும்
புரத: க்ருத்வா	முன்னிட்டுக் கொண்டு
ஆஜக்மு:	வந்து சேர்ந்தார்கள்.

तेऽङ्गदप्रमुखा वीरा: प्रहृष्टाश्च मुदान्विता: ।
निपेतुर्हरिराजस्य समीपे राघवस्य च ॥

தேऽங்கத ப்ரமுகா வீரா: ப்ரஹ்ருஷ்டாஶ்ச முதா ந்விதா: ।
நிபேதுர் ஹரி ராஜஸ்ய ஸமீபே ராகவஸ்ய ச ॥ 36

அங்கதப்ரமுகா:	அங்கதன் முதலிய
தே	அந்த
வீரா:	வீரர்கள்
முதா அந்விதா:	களிகூர்ந்த மனத்தினர்களாயும்,
ப்ரஹ்ருஷ்டா: ச	முகமலர்ச்சி கொண்டவர்களஆயும்
ஹரிராஜஸ்ய	வானர ராஜருக்கும்
ராகவஸ்ய ச	ஸ்ரீராகவருக்கும்
ஸமீபே நிபேது:	அருகில் இறங்கினார்கள்.

हनुमांश्च महाबाहु: प्रणम्य शिरसा तत: ।
नियतामक्षतां देवीं राघवाय न्यवेदयत् ॥

ஹநூமாம்ஶ்ச மஹாபாஹு: ப்ரணம்ய ஶிரஸா தத: ।
நியதாமக்ஷதாம் தேவீம் ராகவாய ந்யவேதயத் ॥ 37

தத:	உடனே
மஹாபாஹு:	மஹாபாஹுவான

ஹநுமான்	-	ஹனுமான்
ராகவாய	-	ஸ்ரீராகவருக்கு
ஶிரஸா ப்ரணம்ய	-	முடிதாழ்த்தி நமஸ்கரித்து
தேவீம்	-	தேவியை
நியதாம்	-	கற்பு நியமம் ஒன்றையே இடைவிடாது அனுஷ்டித்து வருகிறவளாகவும்
அக்ஷதாம் ச	-	கற்புக்கு(ப் பிறரால்) தோஷமுண்டாகாதிருப்பவளாகவும்
ந்யவேதயத்	-	முதலில் ஸங்கிரஹமாய் விண்ணப்பம் செய்தார்.

दृष्टा देवीति हनुमद्वदनादमृतोपमम् ।
आकर्ण्य वचनं रामो हर्षमाप सलक्ष्मणः ।।

த்ருஷ்டா தேவீதி ஹனுமத்வதனாம்ருதோபமம் ।
ஆகர்ண்ய வசனம் ராமோ ஹர்ஷமாப ஸலக்ஷ்மண: ॥

ஸலக்ஷ்மண: ராம:	-	லக்ஷ்மணரோடு கூடவிருக்கும் ஸ்ரீராமர்
ஹநுமத்வதநாத்	-	ஹனுமாருடைய முகத்தினின்று
தேவீ	-	'தேவி
த்ருஷ்டா	-	கண்டுபிடிக்கப்பட்டாள்'
இதி	-	என்ற
அம்ருதோபமம்	-	அமிர்தம் போன்ற
வசநம்	-	வசனத்தை
ஆகர்ண்ய	-	கேட்டு
ஹர்ஷம்	-	மன ஸந்துஷ்டியை
ஆப	-	அடைந்தார்.

निश्चितार्थस्ततस्तस्मिन् सुग्रीवः पवनात्मजे ।
लक्ष्मणः प्रीतिमान् प्रीतं बहुमानादवैक्षत ।।

நிஶ்சிதார்தஸ் ததஸ் தஸ்மிந் ஸுக்ரீவ: பவநாத்மஜே ।
லக்ஷ்மண: ப்ரீதிமாந் ப்ரீதம் பஹுமாநாதவைக்ஷத ॥ 39

தத:	-	அப்பொழுது
ஸுக்ரீவ:	-	ஸுக்ரீவர்
தஸ்மிந்	-	அந்த
பவநாத்மஜே	-	பவனாத்மஜரிடத்தில்
நிஶ்சிதார்த்த:	-	கார்ய ஸித்தி விஷயத்தில் திடப்பட்டார்;
லக்ஷ்மண:	-	லக்ஷ்மணர்
ப்ரீதிமாந்	-	மன ஸந்துஷ்டியுடையவராய்
பஹுமாநாத்	-	கௌரவத்தால்

ப்ரீதம் - அருமைக்குரியவரை
அவைக்ஷத - உற்று நோக்கிப் பார்த்தருளினார்.

प्रीत्या च रममाणोऽथ राघवः परवीरहा ।
बहुमानेन महता हनुमन्तमवैक्षत ॥

ப்ரீத்யா ச ரமமாணோऽத ராகவ: பரவீரஹா ॥
பஹுமாநேந மஹதா ஹநுமந்த மவைக்ஷத ॥ 40

அத - அப்பொழுது
பரவீரஹா ராகவஃ - சத்ருவீர ஸம்ஹாரகரான ஸ்ரீராகவர்
ரமமாணஃ - களிகூர்ந்தவராய்
ஹநுமந்தம் - ஹனுமந்தரை
மஹதா - பெரும்
பஹுமாநேந - கௌரவத்தால்
ப்ரீத்யா - ப்ரீதி கொண்டு
அவைக்ஷத ச - குளிரக் கடாக்ஷித்தருளினார்.

இத்யார்ஷே ஸ்ரீமத் ராமாயணே வால்மீகீயே ஆதிகாவ்யே
சதுர்விம்ஶதி ஸஹஸ்ரிகாயாம் ஸம்ஹிதாயாம் ஸுந்தர காண்டே
நுமதாத்யா கமநம் நாம சது: ஷஷ்டிதம: ஸர்க: ॥

பஞ்சஷஷ்டிதம: ஸர்க: - 65

ततः प्रस्रवणं शैलं ते गत्वा चित्रकाननम् ।
प्रणम्य शिरसा रामं लक्ष्मणं च महाबलम् ॥
தத: ப்ரஸ்ரவணம் ஶைலம் தே கத்வா சித்ரகாநநம் ।
ப்ரணம்ய ஶிரஸா ராமம் லக்ஷ்மணம் ச மஹாபலம் ॥ 1

युवराजं पुरस्कृत्य सुग्रीवमभिवाद्य च ।
प्रवृत्तिमथ सीतायाः प्रवक्तुमुपचक्रमुः ॥
யுவராஜம் புரஸ்க்ருத்ய ஸுக்ரீவமபிவாத்ய ச ।
ப்ரவ்ருத்திமத ஸீதாயா: ப்ரவக்து முபசக்ரமு: ॥ 2

தே	-	அவர்கள்
சித்ரகாநநம்	-	விசித்திரமான வனங்கள் அடர்ந்த
ப்ரஸ்வரணம்	-	பிரஸ்ரவணம் என்னும்
ஶைலம் கத்வா	-	மலையில் வந்து சேர்ந்து
ததஃ	-	இன்னும்
ராமம்	-	ஸ்ரீராமருக்கும்
மஹாபலம்	-	மிக பலவானான
லக்ஷ்மணம் ச	-	லக்ஷ்மணருக்கும்
ஸுக்ரீவம் ச	-	ஸுக்ரீவருக்கும்
அபிவாத்ய	-	கைகூப்பித் தண்டனிட்டு
ஶிரஸா ப்ரணம்ய	-	முடி தாழ்த்தி நமஸ்கரித்து
அத	-	பிறகு
யுவராஜம்	-	இளவரசை
புரஸ்க்ருத்ய	-	முன்னிட்டுக் கொண்டு
ஸீதாயாஃ ப்ரவ்ருத்திம்	-	ஸீதையின் தற்கால விருத்தாந்தத்தை
ப்ரவக்தும்	-	விஸ்தாரமாய்ச் சொல்ல
உபசக்ரமுஃ	-	ஸமயம் எதிர்பார்த்துக் காத்துநின்றார்கள்.

रावणान्तःपुरे रोधं राक्षसीभिश्च तर्जनम् ।
रामे समनुरागं च यश्चायं समयः कृतः ॥
एतदाख्यान्ति ते सर्वे हरयो रामसंनिधौ ॥
ராவணாந்த: புரே ரோதம் ராக்ஷஸீபிஶ்ச தர்ஜனம் ।
ராமே ஸமநுராகம் ச யஶ்சாயம் ஸமய: க்ருத: ॥ 3
ஏததாக்யாந்தி தே ஸர்வே ஹரயோ ராமஸந்நிதௌ ॥

தே ஹரயஃ	-	அந்த வானரர்கள்
ஸர்வே	-	எல்லோரும்
ராமஸந்நிதௌ	-	ஸ்ரீராமர் ஸன்னிதியில்

ராவணாந்தঃபுரே	ராவணனுடைய அந்தப்புரத்தில்
ரோதம்	சிறை வைக்கப்பட்டிருப்பதையும்
ராக்ஷஸீபிঃ	ராக்ஷஸிகளால்
தர்ஜநம் ச	மிரட்டப்படுவதையும்,
ராமே	ஸ்ரீராமரிடத்தில்
ஸமநுராகம் ச	விசேஷ அனுராகத்தையும்
ஸமயঃ	காலத் தவணை
க்ருதঃ	செய்யப்பட்டிருப்பது
யঃ ச	எதுவோ
அயம் ச	அதுவும்
ஏதத்	இதை எல்லாம்
ஆக்யாந்தி	விண்ணப்பம் செய்தார்கள்.

वैदेहीमक्षतां श्रुत्वा रामस्तूत्तरमब्रवीत् ।
क्व सीता वर्तते देवी कथं च मयि वर्तते ॥
एतन्मे सर्वमाख्यात वैदेहीं प्रति वानराः ॥

வைதேஹீமக்ஷதாம் ஶ்ருத்வா ராமஸ்தூத்தரமப்ரவீத் ॥
க்வ ஸீதா வர்ததே தேவீ கதம் ச மயி வர்ததே ॥
ஏதன்மே ஸர்வ மாக்யாத வைதேஹீம் ப்ரதி வாநரா: ॥ 4

வைதேஹீம்	வைதேஹியை
அக்ஷதாம் ஶ்ருத்வா	கற்புக்குப் (பிறரால்) தோஷம் உண்டாகாதிருப்பவளாய்க் கேட்டு
உத்தர	அதன்மேல்
து	இப்பொழுது
ராமঃ	ஸ்ரீராமர்
வாநராঃ	'வானரர்களே!
ஸீதா தேவீ	ஸீதா தேவி
க்வ வர்ததே	எங்கு இருக்கிறாள்?
மயி	என்னிடத்தில்
கதம் வர்ததே	எப்படி இருக்கிறாள்?
வைதேஹீம் ப்ரதி	வைதேஹியைப் பற்றிய
ஏதத் ஸர்வம் ச	இது எல்லாவற்றையும்
மே ஆக்யாத	எனக்குச் சொல்லுங்கள்'
இதி அப்ரவீத்	என்று கேட்டருளினார்.

रामस्य गदितं श्रुत्वा हरयो रामसंनिधौ ।
चोदयन्ति हनूमन्तं सीतावृत्तान्तकोविदम् ॥

ராமஸ்ய கதிதம் ஶ்ருத்வா ஹரயோ ராமஸந்நிதௌ ।
சோதயந்தி ஹநூமந்தம் ஸீதாவ்ருத்தாந்த கோவிதம் ॥ 5

ராமஸ்ய	-	ஶ்ரீராமருடைய
கதிதம் ஶ்ருத்வா	-	திருவாயினின்று வந்ததைக் கேட்டு
ஹரய:	-	வானரர்கள்
ஸீதாவ்ருத்தாந்தகோவிதம்	-	ஸீதையின் சரிதையை உள்ளபடி அறிந்த
ஹநூமந்தம்	-	ஹனுமாரை
ராமஸந்நிதௌ	-	ஶ்ரீராமர் ஸன்னிதியில்
சோதயந்தி	-	தூண்டி வேண்டிக் கொண்டார்கள்.

श्रुत्वा ते वचनं तेषां हनुमान् मारुतात्मजः ।
प्रणम्य शिरसा देव्यै सीतायै तां दिशं प्रति ॥
उवाच वाक्यं वाक्यज्ञः सीताया दर्शनं यथा ॥

ச்ருத்வா து வசனம் தேஷாம் ஹநுமாந் மாருதாத் மஜ: ।
ப்ரணம்ய ஶிரஸா தேவ்யை ஸீதாயை தாம் திஶம் ப்ரதி ॥
உவாச வாக்யம் வாக்யஞ: ஸீதாயா தர்ஶனம் யதா ॥ 7

தேஷாம்	-	அவர்களுடைய
வசநம்	-	பிரார்த்தனையை
ஶ்ருத்வா	-	கேட்டு
து	-	இப்பொழுது
மாருதாத்மஜ:	-	வாயுகுமாரரும்
வாக்யஜ்ஞ:	-	பேச வல்லவருமான
ஹநுமான்	-	ஹனுமந்தர்
ஸீதாயை தேவ்யை	-	ஸீதா தேவிக்கு
தாம் திஶம் ப்ரதி	-	அந்தத் திக்கை நோக்கி
ஶிரஸா	-	தலையாலே
ப்ரணம்ய	-	வணங்கி நமஸ்கரித்து,
ஸீதாயா:	-	ஸீதையின்
தர்ஶநம்	-	தர்சனத்தைப் பற்றியே
யதா	-	பின்வரும்
வாக்யம்	-	மொழியை
உவாச	-	சொன்னார்.

समुद्रं लङ्घयित्वाहं शतयोजनमायतम् ।
अगच्छं जानकीं सीतां मार्गमाणो दिदृक्षया ॥

ஸமுத்ரம் லங்கயித்வாஹம் ஶதயோஜன மாயதம் ।
அகச்சம் ஜானகீம் ஸீதாம் மார்கமாணோ தித்ருக்ஷயா ॥ 8

அஹம்	-	"நான்
ஜாநகீம்	-	ஜனகர் திருமகளான
ஸீதாம்	-	ஸீதையை
தித்ருக்ஷயா	-	காணுமாசையினால்

மார்கமாண:	தேடிக்கொண்டு
ஶதயோஜநம்	நூறு யோஜனை
ஆயதம்	நீண்ட
ஸமுத்ரம்	கடலை
லங்கயித்வா	தாண்டி
அகச்சம்	சென்றேன்.

तत्र लङ्केति नगरी रावणस्य दुरात्मनः ।
दक्षिणस्य समुद्रस्य तीरे वसति दक्षिणे ॥

தத்ர லங்கேதி நகரீ ராவணஸ்ய துராத்மன: ।
தக்ஷிணஸ்ய ஸமுத்ரஸ்ய தீரே வஸதி தக்ஷிணே ॥ 9

தத்ர	''அவ்விடத்தில்
தக்ஷிணஸ்ய	தெற்கு
ஸமுத்ரஸ்ய	ஸமுத்திரத்தின்
தக்ஷிணே	தெற்கு
தீரே	கரையில்
துராத்மந:	துராத்மாவான
ராவணஸ்ய	ராவணனுக்கு
லங்கா இதி	லங்கை என்ற
நகரீ	நகர்
வஸதி	இருக்கிறது.

सन्न्यस्य त्वयि जीवन्ती रामा राम मनोरथम् ॥

தத்ர த்ருஷ்டா மயா ஸீதா ராவணாந்த: புரே ஸதீ ।
ஸந்ந்யஸ்ய த்வயி ஜீவந்தீ ராமா ராம மநோரதம் ॥ 10

ராம	''ஸ்ரீராமரே!
ஸதீ	கற்புடைய
ராமா ஸீதா	ஸௌந்தரியான ஸீதை
தத்ர	அங்கு
ராவணாந்த:புரே	ராவணனுடைய அந்தப்புரத்தில்
மயா	என்னால்
த்ருஷ்டா	காணப்பட்டாள்;
த்வயி	தேவரீரிடத்தில்
மநோரதம்	அபிநிவேசத்தை
ஸம்ந்யஸ்ய	வைத்து
ஜீவந்தீ	உயிரைத் தரித்திருக்கிறாள்.

दृष्टा मे राक्षसीमध्ये तर्ज्यमाना मुहुर्मुहः ।
राक्षसीभिर्विरूपाभी रक्षिता प्रमदावने ॥

த்ருஷ்டா மே ராக்ஷஸீமத்யே தர்ஜ்யமாநா முஹுர்முஹு: ।
ராக்ஷஸீபிர்விரூபாபீ ரக்ஷிதா ப்ரமதாவநே ॥ 11

ப்ரமதாவநே	- ‘‘சிங்கார வனத்தில்
ராக்ஷஸீமத்யே	- ராக்ஷஸிகளிடையில்
விரூபாபிஃ	- கோர ரூபமுள்ள
ராக்ஷஸீபிஃ	- அரக்கிகளரல்
முஹுர்முஹுஃ	- அடிக்கடி
தர்ஜ்யமாநா	- மிரட்டப்பட்டுத் திகிலடைந்தவளாய்
ரக்ஷிதா	- காவல் காக்கப்பட்டவளாய்
மே த்ருஷ்டா	- என்னால் காணப்பட்டாள்.

दु:खमापद्यते देवी तवादु:खोचिता सती ॥

துக்க மாபாத்யதே தேவீ தவாது: கோசிதா ஸதீ ॥ 12

அதுஃகோசிதா	- ‘‘துக்கத்திற்கு அருகாளல்லாத
ஸதீ தேவீ	- கற்புடைய தேவியார்
ததா	- அவ்வண்ணம்
துஃகம்	- துக்கத்தை
ஆஸாத்யதே	- அனுபவிக்கின்றார்.

रावणान्त:पुरे रुद्धा राक्षसीभि: सुरक्षिता ।
एकवेणीधरा दीना त्वयि चिन्तापरायणा ॥

ராவாணாந்த: புரே ருத்தா ராக்ஷஸீபி: ஸுரக்ஷிதா ।
ஏகவேணீதரா தீநா த்வயி சிந்தா பராயணா ॥ 13

अध:शय्या विवर्णाङ्गी पद्मिनीव हिमागमे ।
रावणाद्विनिवृत्तार्था मर्तव्यकृतनिश्चया ॥

அத: ஶய்யா விவர்ணாங்கீ பத்மிநீவ ஹிமாகமே ।
ராவணாத் விநி வ்ருத்தார்தா மர்தவ்ய க்ருதநிஶ்சயா ॥ 14

देवी कथञ्चित् काकुत्स्थ त्वन्मना मार्गिता मया ॥

தேவீ கதஞ்சித் காகுத்ஸ்த த்வன்மநா மார்கிதா மயா

தேவி	- ‘‘தேவியார்
ஏகவேணீதரா	- ஒற்றைப் பின்னலான தலைமயிரை உடையவளாய்
அதஃஶய்யா	- தரையிலேயே சயனித்திருப்பவளாய்
ராவணாந்தஃபுரே	- ராவணன் அந்தப்புரத்தில்
ருத்தா	- சிறை வைக்கப்பட்டிருப்பவளாய்
ராக்ஷஸீபிஃ	- அரக்கிகளால்
ஸுரக்ஷிதா	- கடுங்காவலில் வைத்திருக்கப்பட்டவளாய்

ஹிமாகமே - பனிக் காலத்தில்
பத்மிநீ இவ - தாமரை போல்
விவர்ணாங்கீ - மனமிழந்தவளாய்
ராவணாத் - ராவணனிடத்தினின்று
விநிவ்ருத்தார்தா - தப்ப வழி காணாதவளாய்
மர்தவ்யக்ருதநிஶ்சயா- உயிரை மாய்க்க நிச்சயித்தவளாய்
தீநா - பரிதாபமான நிலையில் இருப்பவளாய்
கதஞ்சித் - இப்படியெல்லாமிருக்கையிலும்
காகுத்ஸ்த - காகுத்ஸ்தரே!
த்வயி - தங்களிடத்தில்
சிந்தாபராயணா - சிந்தையை அர்ப்பணம் செய்து விட்டவளாய்
த்வந்மநா: - தேவரீரையே தியானித்துக் கொண்டிருப்பவளாய்
மயா மார்கிதா - என்னால் கவனித்துப் பார்க்கப்பட்டாள்.

इक्ष्वाकुवंशविख्यातिं शनैः कीर्तयतानघ ।
सा मया नरशार्दूल विश्वासमुपपादिता ॥

இக்ஷ்வாகுவம்ஶ விக்யாதிம் ஶனை: கீர்தயதாநக ।
ஸா மயா நரஶார்தூல விஶ்வாஸ முப பாதிதா ॥ 15

அநக - ''வசைக்கிடமாகாத
நரஶார்தூல - புருஷோத்தமரே!
ஸா - அவள்
இக்ஷ்வாகுவம்ஶவிக்பாதிம்-இக்ஷ்வாகு வம்சத்தின் பெருமையை
கீர்தயதா - ஸ்தோத்திரமாய்ப் பாடிக் கொண்டிருந்த
மயா - என்னால்
ஶனை: - ஸ்வேச்சையாய்
விஶ்வாஸம் - நம்பிக்கையை
உபபாதிதா - அடையும்படி செய்யப்பட்டாள்.

ततः सम्भाषिता देवी सर्वमर्थं च दर्शिता ॥
रामसुग्रीवसख्यं च श्रुत्वा प्रीतिमुपागता ।

தத: ஸம்பாஷிதா தேவீ ஸர்வமர்தம் ச தர்ஶிதா ।
ராம ஸுக்ரீவ ஸக்யம் ச ஶ்ருத்வா ப்ரீதிமுபாகதா ॥ 16

தத: - அதன்மேல்
தேவீ - தேவி
ஸம்பாஷிதா - ஸம்பாஷணை செய்தாள்.
ஸர்வம் - எல்லா
அர்தம் ச - காரியத்தையும் (விஷயங்களையும்).
தர்ஶிதா - அறிவிக்கப்பட்டாள்.

ராமஸுக்ரீவஸக்யம் ச	ஸ்ரீராமருக்கும் ஸுக்ரீவருக்கும் உண்டான நேசத்தையும்
ஶ்ருத்வா	கேட்டு
ப்ரீதிம்	மன அமைதியை
உபாகதா	பெற்றாள்.

नियतः समुदाचारो भक्तिश्चास्यास्तथा त्वयि ॥

நியத: ஸமுதாசாரோ பக்திஶ் சாஸ்யாஸ்ததா த்வயி ॥ 17

த்வயி	‘‘தேவரீரிடத்தில்
அஸ்யாঃ	இவளுக்கு
பக்திঃ	பக்தி
ததா	அப்படி உள்ளபடியால்
ஸமுதாசாரঃ	உத்தேசமாக உள்ள ஸர்வமும்
நியதঃ ச	கற்பு நியமம் ஒன்றையே இடைவிடாது அனுஷ்டானமும் அசைவற்றதாக உளது.

एवं मया महाभागा दृष्टा जनकनन्दिनी ।
उग्रेण तपसा युक्ता त्वद्भक्त्या पुरुषर्षभ ॥

ஏவம் மயா மஹாபாகா த்ருஷ்டா ஜனகநந்தி நீ ।
உக்ரேண தபஸா யுக்தா த்வத்பக்த்யா புருஷர்ஷப ॥ 18

புருஷர்ஷப	‘‘புருஷோத்தமரே!
ஏவம்	இப்படி
த்வத்பக்த்யா	தேவரீரிடத்தில் பக்தியாகிற
உக்ரேண	மஹா உத்கிருஷ்டமான
தபஸா யுக்தா	தவத்துடன் இருக்கும்
ஜநகநந்திநீ	ஜனகர் திருமகளான
மஹாபாகா	மஹாபாகை
மயா	என்னால்
